# பாரத மணி

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 3 | ஞாயிறு 3-3-40 பிரமாதி௵ மாசி௴ 20௳ | முத்து 17 |
|---|---|---|


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| சுயராஜ்யம் ... ... ... ... | | 462 |
| என் திட்டம் ... ... | எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார் | 464 |
| உலக வர்த்தமானம் ... ... ... ... | | 466 |
| இது தெரியுமா ? ... ... ... ... | | 467 |
| இந்தியாவும் ஜப்பானும் ... ... ... | த. கிருஷ்ணமூர்த்தி | 468 |
| கிராம சேவை ... | ராவ்சாகேப் கே. ஸுப்ரமண்யம் | 471 |
| அனாதைச் சிறுமி ... ... ... | கு. பா. வெங்கடாசலம் | 474 |
| வள்ளியின் காதலன் ... ... ... | கே. வெங்கட்டராமன் பி.ஏ. | 477 |
| கோல்ட் ஸ்மித் ... ... ... ... | “கௌசிகா” | 480 |
| சிறுவர் பகுதி ... ... ... ... | ரங்கநாதன் | 482 |



“பாரத மணி” யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# சுயராஜ்யம்

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் 'பாரதமணிக்கு' பிரத்தியேகமாக அனுப்பி இந்த முத்தில் பிரசுரமாயிருக்கும் கட்டுரையை நமது நண்பர்கள் ஊக்கத்துடன் வாசிப்பார்களென்று நம்புகிறோம். வாசிப்பது மாத்திரமல்ல, அவரவர்களால் இயன்ற மட்டிலும், அவர்கள் ஏற்றுக் கொண்டவரையில், திட்டத்தைச் செயலாக மாற்றி சுவானுபவத்திற்கு கொண்டுவந்து தேச முன்னேற்றத்தைப் பூர்த்தி செய்வார்களென்றும் நம்புகிறோம்.

விஷயதானம் கிடைத்தவரையில் ஒவ்வொரு தலைவர்களிடமிருந்து, கக்ஷிபேதம் பாராட்டாமல், இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு அவர்கள் போடும் தெளிவான, கையாளக்கூடிய, திட்டத்தை "பாரதமணி"யில் வாராவாரம் பிரசுரிக்கலாமென்று எண்ணுகிறோம். இந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்யும்படியாய் நமது தலைவர்களெல்லோரையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறோம். "பாரதமணி"யில் நமது தலைவர்களின் அறிவோசை கடலோசைபோல், விடாமல் பரவ வேண்டுமென்கிற ஆசையால் தூண்டப்பட்டு, பிரார்த்திக்கிறோம்.

நமது அடிமைத்தனத்திற்கு மூலகாரணமென்ன? சொல்லைச் செயலாக்கும் வன்மையை நாம் இழந்துவிட்டது முதற்கொண்டுதானே நம்மை இந்த அடிமைத்தனம் நிழல்போல் எக்காலும் தொடர்கிறது. ஜீரண சக்தியை இழந்தவனுக்கு தூரதிருஷ்டி இருந்து என்ன பயன்? நேரான இரத்த ஓட்டமும் சுகமான வாழ்வும் உண்டோ? இந்த அடிமைத்தனத்தைப் போக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. சொல்லைச் செயலாக்கும் தைர்ய லக்ஷ்மிதான் வேண்டும். இந்த தைர்ய லக்ஷ்மிதான், உண்மையான சுயராஜ்யம் அடைய முக்கியமான யோக சாதனமாகும்.

## மகாத்மா காந்தி

மகாத்மா காந்தியை அழகிய மாரிகால மேக மண்டலத்திற்கு பல தடவைகளில் நான் ஒப்பிட்டிருக்கிறேன். இந்தியாவிலுள்ள நாற்பது கோடி ஜன சமூகத்தில் தூங்கி நின்ற அரசியல் சக்தியை, மழைகால சீதோஷ்ண ஸ்திதி, காரை நீராகப் பெருக்குவதுபோல் மகாத்மா காந்தி வெள்ளப் பெருக்காய்ப் பெருக்கி, ஓர் பெரிய இயக்கத்தை மூட்டி, புத்துயிரின் மேனியை நமக்கு இருபது வருஷ காலமாய் அளித்திருக்கிறார். இல்லா சுக வாழ்க்கைக்கு, தனதான்ய சம்பத்திற்கு, மேகம் மழையாய்ப் பொழிந்தால் மாத்திரம் போதுமா? காட்டில் புரண்டோடும் வெள்ளத்தை ஊருக்கும், வயலிற்குமல்லவோ, நாம் மேடு பள்ளம்பார்த்து கரையிட்டுகொண்டு வரவேண்டும். வயலில் பயிர் தானாகவே விளைந்து விடுமா? அல்லது வயல் வயலாய் வெள்ளத்தை மேகமே ஒன்று சேர்த்துப் புரட்டி அடித்துக்கொண்டு தானாகவே பாய்ச்சி நீராணிக்கன் வேலையையும் 'இரிகேஷன் இஞ்சினீயர்' வேலையையும் செய்யுமா? ஆகையால், இயல்பால் புரண்டு வரும் ஆற்று வெள்ளத்தை, தன் க்ஷேமத்தையும் லாபத்தையும் தேடுபவர்கள், ஒன்றுகூடி, வாய்க்காலிட்டு, கரையிட்டு, செப்பனிட்டு, புரட்டி, தங்கள் தங்கள் வயலிற்கு, இராப்பகலாய் தோளில் மண்வெட்டியுடன் நின்று, வெள்ளம் சோருமுன், பாய்த்துக்கொள்ளவேண்டாமா? அப்பொழுதுதானே வயலில் தைர்யமாய்

பயிரிடலாம். லக்ஷ்மி கடாக்ஷம் பெற்று குதிரில் நெல்லைக் காணலாம்.

இப்படி மகாத்மா காந்தியால் வெளிப் படுத்தப்பட்ட நம்முடைய சக்தியை நாம் திட்டமிட்டு சரிவர இதுவரையில் உப யோகப்படுத்தாத படியால்தான்—கரகோ ஷமும் தலையங்கமும் எதற்குப்பயன்—இன்னும் நாம் ஓர் ஏழைக் குடும்பமாய் நின்று, நமக்குள்ளே வகுப்புவாதமும், சண்டையும், சச்சரவும், போட்டுக்கொண் டிருக்கிறோம். சட்டியில் ஒரு பிடி அன்னம் தான் இருப்பதால் மூத்த பிள்ளைக்கு முதல் பிடியா, இளைய பிள்ளைக்கு முதல் பிடியா என்று வகுப்புவாதம் நடக்கும் பொழுது அடுத்தாத்துக்காரன் உட்புகுந்து குரங்கு மத்தியஸ்தம் செய்கிறான். "இருவருக்கும் வேண்டாம், சண்டை தீருமுன் நானும் பசியால் பீடிக்கப்படு கிறேன், தவிர ஓர் மகாநாட்டுக்கும் நான் போக வேண்டியவனாயிருக்கிறேன், எனக்கு முன் இந்த பிடி சோற்றை போட்டு விடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே சட்டியை எடுத்துக்கொண்டு வெளியேறி விடுகிறான்.

ஆகையால்தான் இருபது வருஷகால மாக ஓய்வு, ஒழிவு அன்னியில் காங்கிய மலைச்சாரல் இடைவிடாமல் அடித்துக் கொண்டு நமது ஆற்றில் வெள்ளத்தை அளித்துக்கொண்டிருந்தாலும், நமது நாட்டில் தேச முன்னேற்றத் திட்டம் தீர் மானமாய் இல்லாததால், வாய்க்கால் வசதி இல்லாத வெள்ளம்போல், நமது தொண் டெல்லாம் வீண் போகிறது. விழலுக் கிறைத்த நீராகிறது.

## திட்டம்

இந்த ராம்கார் காங்கிரஸ் முதற்கொண் டாவது நாம் தெளிவான திட்டம் போட் டுக்கொண்டு தொண்டுசெய்வது அவசியம். (1) எவ்விதத்தாலும் தனித்தொகுதியை ஒழித்தல். (2) அரசியல் மூலமாக மத ஆசார விஷயமான சீர்திருத்தங்களை கொண்டுவராமல் தடுப்பது. (3) விவசாயத் திற்கும் கைத்தொழிலிற்கும் வேற்றுமை யில்லாமல், ஒற்றுமைப்படுத்தி ஓர்திட்டம் தயாரிப்பது. (4) சில்லரைகிராமங்களை ஒன்று சேர்த்து அவைகளை ஓர் உண்மை யான கிராமமாக நாகரீக சுகவாச வசதி யுடன் அமைப்பது: (Creation of a rural unit) அதற்கு ஒரு பஞ்சாயத்து தேர்ந்தெடுப்பது. இந்தப் பஞ்சாயத்தில் தலைமை வகித்து பொதுத்தொண்டு செய்ய ஓர் தலைவர் அமைப்பது. (5) ஓர் அரசியல் நிர்ணயசபையை தேர்ந்தெடுத் தல். (6) பண்டிட் ஜவஹர்லால் தலைமை யின் கீழ் வேலைசெய்துவரும் தேசியத் திட்டக்கமிட்டியின் (National Planning Committee) தீர்மானங்களை துரிதப் படுத்தி அமுலுக்குக் கொண்டுவர வேண் டியது.

இந்த திட்டப்படி ஒவ்வொரு மாகாணத் திலும், இந்தியா முழுவதும் பூர்த்தி செய்து தொண்டுபுரிய இப்பொழுதே ஆரம்பித்துவிட்டால் ஏன் நமக்கு சுயராஜ் யம் பத்து மாதத்தில்—கர்பகாலம்—கிடைக்காது? ராம்கார் காங்கிரஸ் நடக்கும் தேதியிலிருந்து பத்தாவது மாதத்தில் புத் துயிர் கொண்ட ஓர் புதுப் பிறப்பு நமது தேசத்திற்கு உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

கே. எஸ். வேங்கடரமணி

# என் திட்டம்

(எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார்)

நமது நாடு முன்னேற்றம் அடைய நாம் இதுவரையில் பல துறைகளில் தொண்டுசெய்து வந்திருப்பதைப்பற்றி நீங்கள் திருப்தியடைந்திருக்கிறீர்களோ இல்லையோ என்பது எனக்குத் தெளிவாய் தெரியவில்லை. முன்னேற்றம் என்றுலென்ன ? நமது தேசத்திற்கு கியாதியும் பெருமையும் கிடைக்கவேண்டும். பிறர் மதிக்க வேண்டும். ஜனங்களுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும். எந்த விஷயத்திலும் அஞ்சாத தைர்யம் நமக்கு வேண்டும். நியாயத்திற்குக் கட்டுப்பட்ட தேசமென்று எங்கும் பெயரும் புகழும் பரவவேண்டும்.

நமது தேசம் எதிர்பார்க்கப்படாத ஆச்சரியப்படத்தக்க முன்னேற்றத்தை அடைந்து விட்டதென்று நம்புகிறவர்களுக்கு நான் சொல்லக் கூடியது ஒன்றுமில்லை. ஆனால் இந்த இருபது வருஷகாலத்தில் நமது நாடு முக்கியமான துறைகளில் முன்னேற்றம் அடையவில்லை என்று எண்ணுகிறவர்களுக்கு நான் சில மொழிகள் கூற விரும்புகிறேன்.

முன்னேற்றத்தில் அறிகுறியான துறைகள் என்ன ? (1) அரசியல் இயக்கத்தின் போக்கு (2) தொழில் முன்னேற்றத்தால் வறுமையையும் வேலையில்லாத் தனத்தையும் ஒழித்து, பொருளாதாரத்தில் மேன்மையடைவது. (3) வகுப்புவாதத்தை சமரசப்படுத்தி அரசியலில் ஒற்றுமை அடைவது. (4) விஞ்ஞான சாஸ்திரத்தில் முன்னேற்றமடைந்து பயன் பெறுவது.

நமது கல்வி திட்டத்தில் விஞ்ஞானக் கலப்பு (Cias) மிகவும் அதிகரிக்க வேண்டும். அதை தொழிலுக்கு பொருளாதார முறையில் ஒட்டி, நாட்டின் சுகத்தையும், செல்வத்தையும் பெருக்க வேண்டும். நான் சமீபத்தில் வால்டேருக்குச் சென்ற போது ஆந்திர சர்வ கலாசாலையில் இந்த உணர்ச்சியை நான் கண்டுகளித்தேன். இந்த மனோபாவத்தை நாம் முயற்சி யெடுத்து ஊட்டவேண்டும். காரியம் கை கூடுகிறவரையில் இந்த விஞ்ஞான மனோபாவத்தை அரசியலிலும், கல்வி திட்டத்திலும் கைவிடாமல், போற்றவேண்டும்.

நம்முடைய தற்கால அடிமைத் தன்மையையும் மலட்டையும் செயலில், அஞ்சாத செயலால் தான் தொலைக்க முடியும். இந்தக் கோழைத்தனம் போய் செயலில் தீரம் பெறத்தக்க தேசப் பாதுகாப்பு நமது நாட்டின் நன்மைக்கு இன்றியமையாதது, என்று தீர்மானமான கொள்கை நமது அரசியலில் வரவேண்டும். இந்தப் பாதுகாப்பில் நமது சிறுவர்களை ஈடுபடுத்தி பழக்கவேண்டும். நாம் தொழில் அபிவிருத்திக்காக போடும் சட்டதிட்டங்களில் ராணுவ தளவாடங்கள் உற்பத்தி செய்வதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

முக்கியமாய் நம்முடைய பழைய செயல் வழிகளும், நாம் அபிமானத்துடன் போஷித்துவரும் பழய மனப்பான்மைகளும் மாறி, ஓர் புதிய அறிவில் (பிறந்த) நோக்கம் உண்டாகவேண்டும். இதை அனுசரித்து வகுப்புவாதங்களை ஒழித்து ஒற்றுமை ஏற்படும் வழிகளைத் தேடவேண்டும். இந்தியாவில் பிறந்தவர்கள் ஹிந்து - முஸ்லீம்களாயிருந்தாலும் சரி, பிராமணன், அப்ராமணன்களாயிருந்தாலும் சரி, பஞ்சாபி, வங்காளி, தமிழ், தெலுங்கு, மராட்டிய, குஜராத்தியராயிருந்தாலும் சரி, எல்லோரும் ஒரே ஜாதியையும், இனத்தையும் சேர்ந்தவர்கள் என்ற அபிமானமும் எண்ணமும் ஏற்பட்டாலொழிய இந்தப் பெரிய காரியத்தை நடத்தி சாதிக்க முடியாது. இந்த பெரும் சேவையை பக்ஷபாதமன்னியில்

நடத்துவதற்கு நமது மனது எப்பொழுதும் நியாயத்திலே ஆழ்ந்து வேரூன்றி நிற்கவேண்டும்.

இந்த நியாய மனோபாவத்தை அடைய நாம் இப்பொழுது தற்காலம் சர்க்கார் வேலைகளில் வகுப்புப்பிரகாரம்உத்யோகங்கள் ஒதுக்கப்பட்டு வைக்க வேண்டியது தான். இதை கண்மூடித்தனமாக ஒரே சட்டமாக செய்யாமல், நியாயத்தை சமயோசிதமாய்வட்டிப் பார்த்துசெய்யவேண்டும். தவிர, சிலவகுப்புப் பாதுகாப்புகளும் தேவை. சட்ட மூலமாகவோ, சர்க்கார் அதிகாரத்தின் மூலமாகவோ, மதம், மத சம்பந்தமான கொள்கைகள், ஆசாரங்கள், நிர்மாணங்கள், மத சம்பந்தப்பட்ட கல்விப் பயிற்சி, அது சம்பந்தமான பாஷை, லிபி, இவைகளில் புகுந்து அதிகாரத்தைக் கொண்டோ மாறுதல்களோ சீர்திருத்தங்களோ செய்யக்கூடாது.

'மெஜாரிட்டி' கக்ஷிமூலம் ஜனநாயக அரசாங்கம் நடத்துவது உத்தமமான ஜனநாயகமென்னும் கொள்கை இப்பொழுது கொஞ்சகாலமாய் உடைந்து போய் நிற்கிறதென்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கக்ஷி அரசாங்கமன்னியில், எல்லா கக்ஷிகளையும் ஒன்று சேர்த்து அரசியல் நடத்துவதில் (Non-Party Government) பல பயன்கள் உண்டென்பது நிச்சயம். இப்படி ஒத்துப் போவதால், ஹிந்து, முஸ்லிம்போலொத்த எல்லா வகுப்புக்காரர்களுக்கும், தங்கள் தங்களுக்கு அரசாங்கத்தில் ஏதோ கொஞ்சம் பாத்தியதைஇருக்கிறது என்னும்எண்ணமும் ஊக்கமும் பெருகி, நமது நாட்டின் ஒற்றுமைக்கு இது ஓர் பெரிய பலமாகும். முடிவில் நான் பல தடவைகளில் சொல்லுவதை மறுபடியும் திருப்பிச் சொல்லுகிறேன். பின்வரும் ஐந்துவிதக் கொள்கைகள்தான் நமது அரசியலுக்கு பஞ்சேந்திரியங்களாகும். (1) அரசியலில் ஜாதி வேற்றுமை பாராட்டாத ஐக்கியம். (2) பூர்ண சுயராஜ்யம். (3) பிரட்டில்லாத ஜனநாயகம் (4) மாசில்லாத நியாயம். (5) மதத்தோடு கலக்காத அரசியல். (Complete secularism)

---

# அரவிந்த தரிசனம்

ஒவ்வொரு தர்சன தினத்திலும் நிஷ்டையிலமர்ந்திருக்கும் தாயாரும் பகவான் அரவிந்தரும் தங்களிடம் வருபவர்களுக்கெல்லாம் தாராளமாக, ஆத்மாவுக்குச் சந்தோஷத்தை யளித்து அதைச் சுத்தம் செய்யும் ஓர் தெய்வீக சக்தியை வினியோகம் செய்கிறார்கள். நமக்கும், மனுஷ்ய ஜென்மத்துக்கும் அரவிந்தரின் யோகம் அளித்த நலனை யறிந்தவர்கள், அம்மகா புருஷன் கங்கணங் கட்டிக் கொண்டு செய்யும் நம்முடைய தற்கால வாழ்க்கையை மாற்றும் சக்திவாய்ந்த வேட்கை வெற்றி பெறும், ஓர் புதிய தெய்வீக தர்மத்தையும் புதிய உணர்ச்சியையும் கொண்டுவரும் என்று நம்ப வேண்டும்.

டாக்டர். ஆர் வைத்ய நாதஸ்வாமி

---

# உலக வர்த்தமானம்

ஸ்காண்டனேவியா பிரதேசங்களான நார்வே, ஸ்வீடன், டென்மார்க், இம் மூன்று தேசங்களின் வெளிநாட்டு மந்திரிகளும் கூடி தற்கால நிலைமையைப் பற்றி ஆலோசித்தார்கள். தங்களைப் போலுள்ள சிறு தேசங்களுக்கு இம் மஹா யுத்தத்தில் மிகுந்த தீங்கு விளை யுகின்றன என்பதைப் பற்றி மிகுந்த வருத்தப்பட்டனவென்று தெரிகிறது. தங்கள் நடுநிலைமையை ஊர்ஜிதம் செய்தன. ரஷ்யா—பின்லாந்து சண்டை சீக்கிரத்திலேயே முடிவடைய வேண்டும், என்று தங்கள் விருப்பத்தை வெளியிட்டன.

பின்லாந்து வெகு சிரமத்துடன் ரஷ்யப் படையை எதிர்த்து சண்டை செய்கிறது. வியபுரி என்னும் பின்னிஷ் நகரம் நாச மாக்கப்பட்டதாம். பின்லாந்தை முறியடிக்க ரஷ்யா தீவிர முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்க தூதர் ஸமர் வெல்ஸ் சென்ற செவ்வாயன்று இதாலிக்குச் சென்றார். அங்கு இத்தாலிய வெளிநாட்டு மந்திரி கவுண்ட் ஸியானோவுடன் ஒன்றரை மணி நேரம் பேசி இருந்தாரென்று செய்தி கூறுகிறது. இதுவரையில் வெல்ஸ் வரவைப் பொருட்படுத்தாமல் இருந்த இத்தாலியப் பத்திரிகைகள், இப்பொழுது திடீரென்று வெகு ஆனந்தத்துடன் வெல்ஸைப்பற்றி எழுதத் தொடங்கினவாம். வெல்ஸூம் இத்தாலி மந்திரியோடு "சரஸ ஸல்லாபமாய்ப் பேசினேன்" என்று கூறினாராம்.

இங்கிருந்து பெர்லின் சென்று ஹிட்லருடன் கூட வெகுநேரம் பேசினர் என்று தெரிகிறது.

நடக்கும் யுத்தத்தின் நோக்கங்களைப் பற்றியும், அதைஎப்படிநிறுத்துவது என்பதைப்பற்றியும், அதற்குப் பிறகு உலகத்தில் அமைக்கவேண்டிய ஓர் புதிய அரசியல் முறையைப்பற்றியும், பிரபல தீர்க்க தரிசிகளான எச். ஜி. வெல்ஸ், ஜார்ஜ் பெர்னர்ட்ஷா, ஜே. பி. ப்ரீஸ்ட்லி, முதலியோர்கள் சர்ச்சை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்திய சுதந்திரத்தைப்பற்றிய பேச்சேதான் எங்கும் அடிபடுகிறது. வரப்போகும் ராம்கார் கூட்டம் இந்திய சரித்திரத்திலே முக்கியமானதான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும் என்று தலைவர்கள் ஊகிக்கிறார்கள்.

காங்கிரஸ் திரைமறைவில் ஒன்றும் செய்யாது என்றும், அப்படிச் செய்கிறது என்று சொல்லுவது முட்டாள்தனம் என்றும், ராஜென் பாபு சில தீவிரவாதிகளுக்கு பதில் கொடுத்திருக்கிறார். காங்கிரஸ் காரியக்கமிட்டி அப்படி எதைச் செய்தாலும் அதை அகில இந்திய காங்கிரஸ் ஆமோதிக்க வேண்டாமா என்று கேழ்க்கிறார்.

ஜின்னாவின் பவுஷு வரவரவெளிவந்துக் கொண்டிருக்கிறது. முஸ்லீம்களே அவரை வெறுக்கிறார்களாம். ஆனால் அவர் மாத்திரம் தான் வைஸ்ராயிடம் செய்து கொண்ட கோரிக்கைகளை பலமாக ஊர்ஜிதப்படுத்துகிறார். "பிரிட்டிஷார் இந்தியாவை ஆள வேண்டும்என்று எண்ணுகிறார்கள். காந்தி இந்துக்கள் முஸ்லீம்கள் இருவரையும் ஆளவேண்டும் என்று எண்ணுகிறார். நாங்கள் இவ்விரண்டுக்கும் இடங்கொடுக்க மாட்டோம்" என்று மீசையை முறுக்குகிறார்.

கள்ளிக்கோட்டையில் பேசியபோது சென்னை அட்வகேட் ஜெனரல் ஸர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர், வக்கீல்கள் தேசத்துக்குச்செலுத்தவேண்டிய கடமைகளை எடுத்துக் கூறினர். தேசசேவைக்கு ஒரு சமயம் ஏற்படும்போது வக்கீல்களே முன் வந்து தங்கள் மாதரு பூமியைக் காப்பாற்றவேண்டும் என்று கூறுகிறார்.

ஸிலோன் மந்திரிசபை ராஜீநாமா செய்தது.

# இது தெரியுமா?

## சிலோனில் இறக்குமதியாகும் உணவுப் பொருள்கள்

1938-ம் வருஷத்தில் சிலோனில் இறக்குமதியான உணவுப் பொருள்கள் மதிப்பு 980 லக்ஷம் ரூபாய். ரூ. 140 லக்ஷம் மதிப்புள்ள மீன் முதலிய பொருள்களைத் தவிர, அரிசி, கறிகாய், மாமிசம் முதலிய பொருள்களின் மதிப்பு ரூ. 840 லக்ஷம். இத் தொகையில் பெரும்பகுதியான ரூ. 826 லக்ஷம் அரிசியிலும் கறிகாய்களிலும் செலவழிகிறது. 66 சதவிகிதம் அதாவது ரூ. 550 லக்ஷம் மதிப்புள்ள அரிசியும் நெல்லும் 1938-ல் இறக்குமதியாயிற்று. சர்க்கரை ரூ. 80 லக்ஷமும், கறிகாய் பதார்த்தங்கள் ரூ. 195 லக்ஷமும் இறக்குமதியாகின்றன. இதனால் சிலோனில், ஜீவிய உணவான அரிசியின் அளவுக்கு மற்ற உணவுப் பதார்த்தங்களும் செலவாகின்றனவெனத் தெரிகிறது.

அதே வருஷத்தில் பிறதேசங்களிலிருந்து சிலோனில் இறக்குமதியான அரிசியின் அளவு கீழே குறிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 185 லக்ஷம் புஷல் அரிசி இறக்குமதியாயிற்று. இதில் பர்மாதான் ஏகப்பட்ட அரிசி ஏற்றுமதி செய்திருக்கிறது. பர்மா ஏற்றுமதி செய்த அரிசியின் மதிப்பு 335 லக்ஷம் ரூபாய். அதற்கடுத்தபடியாகப் பிரிட்டிஷ் இந்தியா ரூ. 150 லக்ஷமும், ஸயாம் ரூ. 60 லக்ஷமும் மதிப்புள்ள அரிசி ஏற்றுமதி செய்திருக்கின்றன.


**BOOKS FOR ALL**

| | Rs. | A. |
|---|---|---|
| 1. The Message of the Gita Edited by Anilbaran Roy. | 5 | 0 |
| 2. Songs from the Soul By Anilbaran Roy | 1 | 4 |
| **Works of Sri Aurobindo** | | |
| 3. Essays on the Gita 1st Series | 6 | 0 |
| 4. 2nd Series | 7 | 8 |
| 5. Kalidasa | | |
| 6. A System of National Education | 1 | 0 |
| 7. The Ideal of the Karmayogin | 1 | 8 |
| 8. The Renaissance in India | 1 | 4 |
| 9. The Life Divine (Just published Vol. I) | 6 | 0 |

**Svetaranya Ashrama,**

7, North Mada Street, Mylapore.

**ஸ்டார் வாஷிங் ஸோப்**

நம் நாட்டில் தயாரிக்கப்பட்டு தூய்மையாய் வெளுப்பதில் நிகரற்ற 'ஸ்டார் வாஷிங் ஸோப்பை' வாங்கி உபயோகித்து நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குவோருக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

**STAR SOAP WORKS**

Sembanar Koil, S. I. Ry.

(Tanjore Dt.)

# இந்தியாவும் ஜப்பானும்

(த. கிருஷ்ணமூர்த்தி)

ஜப்பானிய கலாசாரம் பெரிதும் ஆரியர் நாகரிகத்திற்குட் பட்டதென்பது நன்கு விளங்குகிறது. பல ஜப்பானியச் சொற்களின் தாது வடமொழி சொற்களினின்றும் தோன்றிய திரிபு என மொழிவல்லுநர் கூறுவர். ஜப்பானுக்கு இந்தியாவினின்றே சைனா மூலம் பௌத்தமதம் பரவியதென வரலாறு கூறுகின்றது. ஜப்பான் சைனாவிற்கும், சைனா இந்தியாவிற்கும் கலை முறையிலும் சமய வழியிலும் கடமைப் பட்டிருக்கின்றன. அதனை அந்தந்த நாட்டுத் தலைவர்கள் இன்றும் ஒருமித்து ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஜப்பானிய பண்டிகைகளில் பல நம் நாட்டனவாகும். நாம் கொண்டாடுவது போன்று அந்நாட்டு சிறுவர்கள் நவராத்திரி கொலுவும், தேர் திருவிழாவும் கொண்டாடுகிறார்கள். சமுதாயத்திலும் நம் நாட்டைப்போன்று அங்கும் ஜாதி பிரிவினை இருந்தது. ஆனால் அது பெரும்பாலும் சென்ற நூற்றாண்டில் மறைந்துவிட்டது. சமுதாயத்தில் அந்நாட்டிலும் தாசி முறை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இன்னும் பல ஒற்றுமைகளை ஜப்பானில் காணலாம். ஆனால் வரலாறு ஜப்பானுக்கும் இந்தியாவிற்கும் நேரடியான உறவு இருந்ததாகக் கூறவில்லை. நமது தொடர்பு அனைத்தும் சைனாவின் மூலமே.

இயற்கை ரீதியாக பௌத்த சமயத்தைக் கைக்கொண்ட பர்மாவும், சிங்களமும் இந்தியாவின் பாகங்களேயாம். சென்ற நூற்றாண்டில் சிங்களத்தைப் பாரதநாட்டினின்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் பிரித்தது. சமீபத்தில் பர்மாவைப் பிரித்தது. அவ்வாறு இவை பிரிக்கபட்ட காலை நமது முஸ்லிம் மக்கள் எத்தகைய எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. பர்மா இந்தியாவோடு இருப்பதால், முஸ்லீமல்லாதார் தொகையே அதிகமாயிருப்பதால், அது பிரிக்கப்பட்டால் தங்கள் வீதாசாரம் அதிகமாகவிருக்குமென அச்சமூகத்தின் நியமனப் பிரதிநிதிகள் வட்டமேஜை மகாநாட்டின்போது பிரிவினையைக் குறித்துவாளாயிருந்தார்கள். ஆனால் அதே தலைவர்கள் ரங்கூன் கலவரத்தின் போது இந்தியத் தலைவர்கள் சும்மாவிருக்கிறார்களெனக் குறை கூறினார்கள். பர்மா நம் நாட்டின் ஒரு மாகாணமாக விருந்திருந்தால் இந்தியா சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க சௌகரியமாயிருந்திருக்கும்.

நிற்க, சையாம், மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள் முதலியனவும், பண்டை நாள் தொட்டு பாரதநாடுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளன. அந்த நாடுகளில் இன்றும் பாரதநாட்டு நாகரிகத்தின் சின்னங்களைக் காணலாம். அந்நாட்டு மக்களில் பலர் பௌத்த சமயத்தையே கைக்கொண்டுள்ளவர்களானபடியால், புத்தர்பிரான் அவதரித்த திருநாடாகிய இந்தியாவின்பால் அவர்களுக்கு அக்கறை இருக்கக்கூடியது இயற்கை. ஆகவே நாம் அவர்களுடன் மேலும் நமது உறவைப் பெருக்கவேண்டும். முக்கியமாக சுதந்திர கிழக்கு ஆசிய நாடுகளுடன் உள்ள தொடர்பைப் பெருக்கி அந்நாடுகளை, இந்திய சுதந்திரத்தில் அக்கரை எடுக்கத் தூண்டவேண்டும். பாரதநாட்டில் பிறந்த நமக்கு ஜெர்மனியையும், அமெரிக்காவையும் பற்றி தெரிந்த அளவிற்கு சமீபத்திலுள்ள சையாம், இந்தோ சைனா முதலியவைகளைப் பற்றித் தெரியாது. இந்தியாவில் முஸ்லிம்களிருப்பதால், அவர்கள் பிற முஸ்லிம் நாடுகளிடை பெரிதும் பற்றுதல் காட்டுவதால், நமக்கு பாரசீகம், அரேபியா போன்ற நாடுகளின் நிலைமை தெரிகிறது. ஆனால் அந்த அளவிற்கும் நமக்கு கிழக்கு ஆசியா செய்திகள் தெரிவதில்லை.

இக்குறைபாட்டைப் போக்குவது நமது கடன். முஸ்லிம்கள் மெக்கா யாத்திரை

போவதால் அவர்களுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் தொடர்பிருந்து வருகிறது. அதைப்போல் நாம் கயா நகரைப் பிரபலப்படுத்தி அதனைப் பௌத்த மெக்காவாக ஆக்கவேண்டும். பிற பௌத்தநாடுகளான, பர்மா, சைனா, ஜப்பான், சையாம் முதலிய நாடுகளில் விளம்பரம் செய்ய வேண்டும். இந்தியாவிற்கு ஐரோப்பிய நாடுகளினின்றும் வரக்கூடிய யாத்ரீகர் அளவிற்கு கிழக்கு ஆசியாவிலிருந்து யாத்ரீகர்கள் வரவில்லை என்பது உண்மை. ஆகவே கிழக்கு ஆசியாவிலிருந்து யாத்ரீகர்கள் இந்தியாவருவதற்குரிய முயற்சிகள் செய்யவேண்டும். அமெரிக்காவிலும் லண்டனிலும் விளம்பர ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருப்பது போன்று, டோகியோவிலும் முக்கிய தலைநகர்களிலும் துவக்க வேண்டும். சிறிது காலமாகவே சிங்களத்திலிருந்து பௌத்தத் துறவிகள் வட இந்தியாவிற்கு வரத் தொடங்கி யிருக்கிறார்கள். அம்மாதிரியாக மற்றும் பல பௌத்த நாடுகளினின்றும் யாத்ரீகர்கள் வரும்படி செய்ய நாம் முயலவேண்டும். அதனால் இந்தியாபொருளாதார வகையில் லாபமடைவதுடன் அத்தகைய தொடர்பால் நிகழும் உறவால் அந்நாட்டு மக்கள் இந்திய சுதந்திரத்தில் ஆசை காட்டாமலிருக்க முடியாது.

டாக்டர் சவர்க்கார் கூறுகிறபடி முஸ்லிம் நாடுகள் இந்தியாமீது பாயக்கூடுமென்ற பயமும் நமக்கிருக்கக்கூடிய கிழக்கு ஆசிய பௌத்த நாடுகளின் உறவால் பெரிதும் ஒழியும். சிறிய தேசங்களான ஹாலந்தும், பெல்ஜியமும் சுதந்திர நாடுகளாகவிருப்பதின் காரணமென்ன? அவைகளைப் பிரான்சு விழுங்க முயன்றபோதெல்லாம் பிரிட்டன் தலையிட்டது. ஜெர்மனி முயன்றபோதும் தலையிட்டது. ஆகவே சிறு தேசமானாலும் அது தன் பக்கத்திலுள்ள வல்லரசுகளின் உறவால், ஒன்றுக்கொன்றுள்ள அச்சத்தால் தனக்குள்ள ஆபத்தை நீக்கிக்கொண்டு வருகிறது. ஜெர்மனி அதன் சுதந்திரத்தை அபகரிக்க முயன்றால் பிரான்சு தனக்கும் ஜெர்மனிக்குமிடையே ஒரு தனி நாடு இருப்பது தன் பாதுகாப்புக்கு நலமென ஈடுபடுகிறது. அங்ஙனமே பிரான்சு தலையிட்டால் ஜெர்மனி எழும். அம்மாதிரியாகப் பல நாடுகளின் உறவைக்கொண்டால் ஒன்றுக்கொன்றுள்ள அச்சத்தால் பலாத்காரத்தில் இறங்க எந்த வல்லரசும் தயங்கும். ஆகவே அரசியல் விதிப்படியும் நாம் வல்லரசாகிய ஜப்பான் போன்ற நாடுகளுடைய உறவு பெறுவது அவசியம். மேற்கிலிருக்கும் முஸ்லிம் நாடுகளிடமிருந்து நமக்கு ஆபத்தில்லாவிட்டாலும் எதற்கும் முன்னெச்சரிக்கையாக கிழக்கு நாடுகளின் உறவையும் பெருக்கிக் கொள்வதே அரசியல் தந்திரமாகும். அதனால் நமக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமுள்ள உறவையும் விட்டுவிடக் கூடாது. உலகத்திலுள்ள எந்த நாடும் மற்றெல்லா நாடுகளையும் ஒருங்கே முறியடிக்கும் வல்லமை பொருந்தியதில்லை. இத்தகைய உறவாலேயே ஒவ்வொரு நாடும் தன் தன் சுதந்திரத்தைக் காப்பாற்றி வருகிறது.

முக்கியமாக நாம் சுதந்திர நாடுகளாகிய சையாம், சைனா, ஜப்பான் உறவைப் பெருக்க வேண்டும். ஜப்பான் வல்லரசாகவிருப்பதாலேயே இன்று ஆசியாக்காரர்கள் தலைதூக்கி நிற்கமுடிகிறது. அது ஜார் ரஷ்யாவைச் சென்ற நூற்றாண்டில் தோற்கடித்தபோது அதனை வாழ்த்தினோம். இன்றும் அந்நாடு மேல்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியைக் கைக்கொண்டிருந்தும் ஆசியாவின் கொள்கையாகிய "எளிய வாழ்க்கை; உயரிய நோக்கம்" என்ற விதியை மறந்துவிடவில்லை. அதன் உண்மையை அறிய அந்நாட்டின் எல்லாத் தலைவர்களின் தனிப்பட்ட சொந்தவாழ்விலும் காணலாம். நவீன நிலைமைக்கு ஏற்றபடி பொருளாதாரத் துறையிலும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சமமாக அது நிற்கிறது. அந்நாடு சுதந்திரமாய் வல்லரசாக விருப்பதாலேயே "வெள்ளையர் ஆளப் பிறந்தவர்; இதரர் ஊழியம் செய்யப் பிறந்தவர்" என்ற சொல் மன்பதையில் ஒலிக்காமலிருக்கிறது. ஆகவே ஜப்பான் அழிந்தால் அது வெள்ளையரல்ல எல்லா மக்களையும் பாதிக்கும்.

ஜப்பான் இந்திய சுதந்திரத்தில் அதிக அக்கரை காட்டவில்லை என்பது ஒரு

குறை. ஆசியாகண்டம் ஆசியாகாரருக்கே, என்று பல ஜப்பானியத் தலைவர்கள் கூறினாலும் அவர்கள் அந்நியர் ஆதிக்கத்திலுள்ள 'பல ஆசிய பிரதேசங்களின் சுதந்திரத்தில் போதுமான அக்கரை காட்டவில்லை. அவ்வாறு அவர்கள் அக்கரை காட்ட பிறரும் முயலவில்லை. ஆகவே அக்குறைபாட்டை நீக்கவேண்டியது நமது கடமை. ஜப்பானும் அதுவே பெரிதும் கைத்தொழிலில் முன்னேறி வல்லரசாக விளங்குவதால் இத்தகைய முயற்சிக்கு ஆதரவளித்தல் வேண்டும். பல பாரதப் புதல்வர்களுக்கு கைத்தொழிலில் பயிற்சி அளிக்கவேண்டும். ஜப்பான் தொழில்கள் குறைந்த விலைக்குச் சாமான்களை தயார் செய்யும்போது, இந்திய மாணாக்கர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவிற்குமே தொழிலைக்கற்கச்செல்லவேண்டியிருக்கிறது. ஜப்பானியர் இந்திய மாணவர்களை ஜப்பானுக்குத் திருப்ப இலவசப் படிப்புக்கு ஏற்பாடு செய்தல் நலம். இத்தகைய உதவிகளை ஜப்பான் இந்தியாவிற்குச் செய்ய முற்பட்டாலே நட்பு பெருகும். அதனால் இரு நாடுகளிடை உள்ள வர்த்தகம் பெருகி இரு தரப்பாரும் லாபமடையலாம்.

பொது உடமைக்காரர்களுடன் இன்று சேர்ந்து கொண்டுள்ள சியாங்கே ஷேக்கை ஜப்பான் எதிர்க்கிறது. பின்லந்துபோராட்டத்தால் இனிமேல் ரஷ்யா சைனாவிற்கு உதவ முடியாது. பல வல்லரசுகளும் சோவியத் அரசாங்கத்தை ஒழிக்க பின்லந்துக்கு உதவி புரிகின்றன. ஆகவே சீனத் தலைவர் தமது பழம் உறவை ஜப்பானுடன் புத்தாண்டில் கொள்வாராக. ஜப்பான்போராட்டம் நியாயமானாலும் அது சைனாவில் தன் சேனையை அனுப்பி போராடுகிறபடியால், பாமர மக்கள், ஜப்பான் ஏகாதிபத்யப் பித்தாசை கொண்டலைகிறதெனவே அதனை வெறுக்கிறார்கள். ஆகவே ஜப்பானும் சைனாவுடன் சமாதானம் செய்து கொண்டு இங்கிலாந்து, பிரான்சு மாதிரி ஒருங்கே உழைக்க வேண்டுமென்பதே புத்தாண்டு வேண்டுதல். ஜப்பானுக்குக் குடியேற இடம் வேண்டுமென்பது உண்மையே. அதற்குக் காலி நிலங்களான வட ஆஸ்திரேலியா போன்றவைகளில் முயலுவதே அறிவுடைமை. அத்தகைய வழியில் ஜப்பான் ஈடுபடவும், சியாங்கே ஷேக் பொது உடமை உறவைவிட்டு ஜப்பானுடன் சமாதானம் செய்துகொள்ளவும் விரும்புவோமாக. சைனா-ஜப்பான் உறவால் மன்பதையில் அமைதியை நிலைநிறுத்த முடியும். இருநாடுகளும் நேசமாக வாழ வேண்டுமென்பதே பாரத மக்களின் வேட்கை.

படித்தவர்கள் பாமரர்கள்
கிழவர்கள் இளைஞர்கள்
ஆண்கள் பெண்கள்
எல்லோரும்
படித்து ஆனந்திக்கத்தகுந்தது

❋

**பாரத மணி**

இனிய வாரப் பத்திரிகை

வருஷ சந்தா { உள் நாடு ரூ. 4
வெளி நாடு ரூ. 6 }

❋

இன்றே சந்தாதாரராய்ச்
சேருங்கள்.




# திண்ணையில்

(ராவ் சாகேப் கே. ஸுப்ரமண்யம்)

"என்ன தாத்தா? ரொம்ப நாளாய் உங்களைக் காணோமே! எங்கேபோயிருந்தீர்கள்? விசேஷங்கள் இருந்தால் சொல்லுங்கள்" என்று கிராம பெரிய பையன்கள் ஆரம்பித்தார்கள்.

"என்ன சொல்லுகிறதற்கு இருக்கிறது, எல்லாம் வர வர க்ஷீண தசையில் அதிவேகமாக விழுந்துகொண்டிருக்கோமே. அதுதான் எங்கேயும் பார்க்கிறேன். எந்த கிராமத்திற்குப் போனாலும் ஒரே மாதிரி தரித்திரம்தான். யுத்தம், யுத்தம் என்று விலைவாசிகள் ஏறிவிட்டன. நாமும் தெரிஞ்சோ, தெரியாமலோ, வேண்டியசாமான்களுக்கு அதிகம் துட்டு கொடுத்துதான் தீருகிறோம். இது ஒரு நஷ்டமாச்சுதா? இன்னும் விற்பனை வரி என்று ஒன்று வந்ததே. அதற்காக நாம் தண்டம் கொடுக்கிறோமே அது ஒன்று. இதெல்லாம் சேர்ந்து நம்மை ஒடுக்குகிறது. ஆனால் நம்ம நெல், வாழை, தேங்காய், நவதானியங்கள், கறி, காய் ஏதாவது விலை ஏறி விற்கிறதா என்றால் அதுதான் இல்லை. ஆனதினால் சீக்கிரம் நம்ம கிராம காரியம், அவஸ்தை எல்லாம் முடிந்துவிடும். வரவு மிகக் குறைவு. செலவு என்னமோ ஜாஸ்தி. எத்தனை நாளைக்கு இந்த பிழைப்பு நடக்கும்," என்று கோண கணபதி அய்யர் மிக்க வியாகூலத்துடன் பதிலளித்தார்.

"இப்போதுதான் சர்க்கார் சிரத்தை எடுத்துக்கொண்டு கிராம முன்னேற்றம் செய்யவேண்டுமென்று என்னென்னமோ சொல்லிக்கொண்டிருக்கிறார்களே. கிராமப்பஞ்சாயத்து, அது இதுஎன்று ஏற்பாடுசெய்துகொண்டிருக்கிறார்கள். சுகாதார சட்டம் வந்துவிட்டது. சுகாதார இன்ஸ்பெக்டர் ஏற்பாடு ஆய்விட்டது. அவர், இவர் என்று யாராரோ வந்து லெக்சர் செய்கிறார்கள். இதிலெல்லாம் ஒன்றும் பலனில்லையா?"

"என்ன பலன் இருக்கு? நீங்களே யோசியுங்களேன். சர்க்கரை, சர்க்கரை என்றால் வாய் தித்திக்குமா? சோறு, சோறு என்றால் வயிர் ரொம்புமா? சுகாதார ஆக்டு வந்ததில், நம்ம ஊரில் என்ன நடக்கிறது. தெரு கூட்டுகிறார்கள். குப்பை கூளம் குறைச்சல். ஒன்று, இரண்டு விளக்குகள் ஏற்பட்டன. ஒன்று, இரண்டு கிணறுகள் ஆச்சு. அவ்வளவுதானே. லெக்சர்கள் கேட்டுக் கேட்டு காது புளிச்சும் போயிட்டுது. மாஜிக்லாண்டர்ன் படங்கள் பார்த்து, கண்களும் சலிச்சுப் போச்சுது. இப்போ லெக்சர், படங்கள் என்றுகூப்பிட்டால்கூட ஒருவனும்வருகிறதில்லை. மொத்தத்திலே நீங்கள் சுத்தமாயிருக்கவேண்டும். வீடுவாசல்களையும், உங்கள் உடைகளையும், பாத்திரம் பண்டங்களையும், ஆகாரங்களையும், பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். வீதிகளை அசுத்தம் செய்யக்கூடாது. இந்தக் கதைகள்தானே எந்த லெச்சர்லேயும். இதுகள்தான் நாம் மனுஷனாகப் பிறந்து, அதுவும் இந்த சிரேஷ்டமான புண்ணிய பாரத பூமியில் அனுசரித்து வருகிறதுதானே. சிக்ஷை, அபராதம் (கண்டுபிடித்து கோர்ட்டில் ருஜூவானால்) என்று இப்போ ஆக்டு சொல்லுகிறது. நம்ம பூர்வீக சாஸ்திரங்கள், இந்த

அனுசார அக்கிரமங்களுக்கு (கண்டு பிடிச்சாலும் இல்லாவிட்டாலும்) நரகப் பிராப்தி என்றே சொல்லுகிறது. சாஸ்திரங்களெல்லாம் சுகத்திற்காகத் தானே ஏற்பட்டது. சாதாரணமாக மனிதனை ஏமாத்தலாம். தெய்வத்தையும் மனச்சாக்ஷியையும் ஏமாத்த முடியுமா? அசுத்தம் வியாதிகளுக்குக் காரணம் என்று தெரியாதவர்கள் யார் இருக்கிறார்கள்? எல்லோர்க்கும் தெரியும். வியாதிகளுக்கு அநேகமாக வியாதிக் கிருமிகள் காரணம் என்பதும், அந்த அபாயக் கிருமிகள் அசுத்த இடத்தில் உற்பத்தியாகின்றன என்பதும், அந்த அசுத்தமான இடங்களை சுத்தம் செய்யவேண்டுமென்பதும் தெரியும். ஆனால் கிராமங்களில் முடிகிறதில்லை. ஏன்? முன் காலத்தில் கிராமங்களில் தெருக்களில் வீடுகள் சேர்ந்தாற்போல் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் குடியிருப்பு. ஆனதால் ஒவ்வொரு வீடும் வாசலும், கொல்லையும் சுத்தமாயிருந்ததுகள். இப்போது ஒரு வீட்டில் குடியிருந்தால் சுத்துப்பக்கத்தில் ஒன்பது வீடு பாழ். சிலது குட்டிச்சுவர்கள்; சில பாழ்மனைகள்; செடிகொடிகளே மரமாக முளைத்து இருக்கிறதுகள். சில மனைகளில் செங்கல் ஓடுகள், முட்டுகள். இந்த மாதிரி ஸ்தானங்களை யார் சுத்தம் செய்யமுடியும்? எத்தனை நாள் தான் செய்யமுடியும்? இந்த மறைவிடமான குட்டிச்சுவர்களில் அசுத்தம் ஏற்படுகிறது. செடி கொடிகளிலிருந்து பூச்சிகள். அந்த இலை, கொடிகளால் மழைத் தண்ணீருடன் அழுகல் எடுத்துப்போன கெட்ட காற்று, செங்கல், ஓடுமுட்டியிருக்கும் சந்துகளில் பாம்பு பல் லிவாசம். அவைகள் இஷ்டம் வந்தபோது வெளியில் உலாவுதல். இதையெல்லாம் தடுக்கவேண்டுமானால் இந்த குடுத்தனக்காரன் அந்த இடங்களில் பிரவேசிக்க வேண்டும். அப்படிச் செய்தால், அக்கிராம பிரவேசகன், செங்கல் ஓடெடுத்துக்கொண்டான், செடி முளைத்திருந்ததை வெட்டி அடுப்பு எரித்துவிட்டான், என்ற வம்புகள் ஏற்படும். இந்தத் துன்பங்களுக்கு யார் ஆளாகிறது என்று, அந்த வீட்டுக்காரன் சிவனே என்று இருந்துவிடுகிறான். அதினாலே கிராமவீதிகள் அசுத்தமாக காணப்படுகின்றன. வீதிகளை சுத்தம்செய்ய சர்க்கார்லே கூலி ஆள்கள். அந்தச்செலவு நாம் வரியாகக் கொடுக்கும் பணத்திலேயிருந்து தான். கொஞ்ச நாளானால் இந்த செலவும் ஜாஸ்தி ஆகும். அப்போது ஊரில் (கிராமங்களிலும்) வரிகள் ஏற்படும். அந்த வரிகளும் நாளாகநாளாக வளர்ந்துகொண்டே போகும் (முனிஸிபாலிடி வரிகள் மாதிரியும், இன்னும் மற்ற வரிகள்போலவும்). இந்த வரிகள் குடியிருக்கும்வீட்டின்மேல் தான். கடைசியில் இப்போதே வரி அதிகம் என்று அவஸ்தைப்படுகிறவன் மேல் இன்னும் ஜாஸ்தி பளுவு உண்டாகிறது. அதைத் தீர்க்கவேண்டி இப்போ அனுபவிக்கிற ஆகாரத்தை, உடையைக் கூட குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இப்பவே நம்ம ஜனங்களுக்கு சத்துள்ள ஆகாரம் குறைவு. ஸௌக்கியம் குறைவு. இன்னும் வரியும் ஏற்பட்டால் சொல்லவேண்டியதில்லை. ஆகையினால் நம் சக்தி, தேக பலம், திடம் காத்திரம் குறையும். ஆள்களும் "பாஸ்கராய நம:" என்று குறுகுகிறான்கள். (தஞ்சாவூர் ஜில்லா மாடுகள் மாதிரி) எப்போது தேக சக்தி பலம் குறைந்ததோ, வியாதிக் கிருமிகளின் ஆக்கிரமிப்புக்கு விழுந்துவிடுகிறான். இந்த கேவல சக்தியுடைய ஜனங்கள் சந்திக்கும் இந்த அவஸ்தை தான். வரவர க்ஷீணமாகிறார்கள்."

"பின்னே உங்கள் அபிப்பிராயத்தைத் தான் சொல்லுங்கள். எப்படி எப்படி செய்யவேண்டும் என்று இப்போது சர்க்காரும் ஆகாரம் பரீக்ஷைகள் செய்ய அநேகம் மேதாவிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்களே. அவர்களும் அப்பப்போ என்னமோ பேபர்லே எழுதிக்கொண் டிருக்கிறார்களே. அவர்கள் சொல்லுகிற மாதிரி நாம் செய்யப்படாதா? சாப்பிடப்படாதா?"

"சரியாய் போச்சு. ஏண்டா? ஆகாரத்திற்கே திண்டாட்டமா யிருக்கு. இதிலே பரீக்ஷை என்னவேண்டி யிருக்கிறது? நல்ல ஆகாரமாயிருந்தால் நாமெல்லாம்

வேண்டாம் என்கிறோமா? எந்த எழவா வது அகப்பட்டால் போதும். வயிற்றை ரொப்பலாம் என்றிருக்கிறோமே. நமக்கு சாப்பிடக் கற்றுக் கொடுக்கிறார்களாக்கும். வேண்டியதுதானே, நாமெல்லாம் சுத்த காட்டு மறுண்டிகள். அனுகரீகங்கள். சாப் பிடுகிற வழி கூட தெரியவில்லை. கையாலும், விரலாலும் எடுத்து தின்கிறோம். கேவலம் அனுகரீகம். நாலு ஒக்காக கரண்டி (Spoon) கத்தி(Table knife) கொரடு (Fork) இது களை உபயோகப்படுத்தச் சொல்லனும் என்று ஆரம்பமோ? அப்படியானல் மேற் குச் சீமைகளில் அநேகம்தொழிற்சாலைகள் இந்த ஆகார ஆயுதங்களைச் செய்ய ஏற் படலாம். அந்தத் தொழிலுக்கு நல்ல வரும்படிதான். அவர்களுக்கும் நல்ல ஆகாரம் கிடைக்கும் (நமக்கு எப்படியானு லும்சரி). ஆகாரப் பொருள்களின் பரீக்ஷைக்கு என்று எந்த தேசத்தி லிருந்தாவது வந்திருப்பார்கள். என்னமோ நம்முடைய புண்ணிய பரதக் கண்டம், வேண்டி வந்தவர்களை 'இல்லை' 'போ' என்று சொல்லாது. அவாளும் சாப் பிட்டுவிட்டு போகட்டுமே. ஆனல் பிரமாத மான கதைகளை இங்கே பேபர்களில் கட்டி விட்டுக்கொண்டு புதிசா சிரமப்பட்டு தோண்டி எடுத்தாற்போல சொல்ல வேண்டாம். நம்முடைய மூக்கு, கண். நாக்கு, பல் எல்லாம் நம் தேகத்திற்கு எது எது தேவை, எது கூடாது என்று நன்ருய் சொல்லுகிறதே. உடம்பின் ஒரு அபூர்வமான சக்தி இருக்கிறதே அந்த சுபாவமான சக்தி நம் சரீரத்தின் மேன் மைக்கு,வேண்டும் என்பதைக் கொண்டுவா என்கிறது. கெட்ட வஸ்துக்களை வேண் டாம் என்கிறது. ஒவ்வொரு வஸ்துவையும் மூக்கு, கண், நாக்கு, முதலானவைகளால் பரீக்ஷித்துத் தானே உள்ளே அனுப்பு கிறது. அப்படியும் தப்பித்தவறி எதா வது வாயில் விழுந்துவிட்டால், நாக்கு தடுத்துவிடுகிறது. அதற்கும் தப்பித்துக் கொண்டால், வயிற்றின் சக்தி வாந்தியாக வாவது, மலமாகவாவது வெளியில் தள்ளி விடுகிறது. இந்த சக்தியை நன்ருக நம்பி அதற்கு அனுகூலமாக நடந்துகொண்டோ மானல் எவ்வளமோ மேல். நம்முடைய உண்மை சக்தியை நம்பாமல், ஆகார மேதாவி (Food Expert) பரீக்ஷை செய்த வகைகளை கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கிறது என்பது சரியில்லை என்று தோன்றுகிறது. தவிரவும் இந்த எக்ஸ்பர்ட் சொல்படி ஆகாரவகைகள் தயாராய் டப்பாக்களில் வரலாம். இது வும் ஒரு தொழில்தான். இப்போது குழந்தைகளுக்காக எத்தனை வகை ஆகாரங்கள் புட்டிகளில் தடபுடல் படு கின்றன? இந்த ஆகாரபுட்டிகளை நம் குழந்தைகளின் க்ஷேம சுக லாபங்களுக்கு எத்தனை சிரமப்பட்டு, தயாரித்து, கப்பல் களில் கொண்டுவந்து, அநேக கஷ்டங் களுக்கு உட்பட்டு வினியோகம் செய் கிருர்கள். (காசு என்னய்யா பிரமாதம்). புண்ணியாத்மாக்கள். அந்த மாதிரி ஆகார டப்பிகள், பாக்கெட்டுகள். நம்ம பெரியவர்கள் தலையிலும் விழும். தற்கால நாகரீக நபர்கள் அவைகளையும் அங்கி கரிப்பார்கள். பேபர்லேயும் வந்து, எக்ஸ் பர்ட்டுகளும் சொல்லி, அநேகம் பட்ட தாரிகள் சர்டிபிகேட்டுகள், டெஸ்டு மோனியல்கள், கொடுத்தபிறகு அதை எடுத்துக் கொள்ளாமல் போகிறது, வீண் முட்டால்தனம் அல்லவா? நம்ம தேசத்து இங்லீஷ் வைத்தியர்களும் அந்த சுத்த மானது, சத்துள்ளது, பிராணுதாரமானது என்று சொல்லப்பட்ட ஆகாரங்களைத் தான் நோயாளிகள் உள்பட உபயோ கிக்கவேண்டும் என்று சொல்வார்கள். வேதவாக்கு, தவறக்கூடாது, தெரியுமா?"

"என்ன தாத்தா! அதிகமாக கேலி செய்கிறீர்களே!"

"கேலி ஒன்றும் இல்லேடா. உண்மை யைச் சொன்னேன். 3, 4 வருஷமாக ஒரு தமாஷ் நடந்து வருகிறதே. தெரி யாதா? அதான் ஜப்பான் வேலை; ஸோயா பீன்ஸ் கதை; என்ன தடபுடல்! எத்தனை நோட்டீஸ்கள்! எத்தனை ஏஜெண்டுகள்!"

"இப்போது அவ்வளவு இல்லைபோ லிருக்கே ஆனல் கதை என்ன?"

"இப்போ அவ்வளவு இல்லை ஆனல்..."

(தொடரும்)

# அனாதைச் சிறுமி

(கு. பா. வேங்கடாசலம்)

## 1

"அம்மா! ஒம் பேரு என்ன?"

"எம்பேரா தாத்தா! அப்பா என்னை 'அம்பிகே'ன்னு கூப்பிடுவாரு. அம்மா 'அடி மூதேவி'ன்னு தான் கூப்பிடுவா."

"ஏனம்மா? அம்மாவும் ஒன்னை 'அம்பிகே'ன்னு' கூப்பிட்டா என்ன?"

"அப்பா அம்பிகே அம்பிகேன்னு எப்போதும் சொல்வாரு. அதுதான் அவரு சாமி பேராம். அம்மா அதைக் கேட்டதுமே எரிஞ்சிவிழுவா. இதனலேத் தான் அம்மா அப்பாவை சண்டைக்குகூட இழுப்பா."

"அப்படீன்னு ஒங்க அம்மா ரொம்பொ பொல்லாதவன்னு சொல்லு."

"ஆமா தாத்தா! ரொம்ப பொல்லாதவ தான். எங்க அப்பாவைக்கூட அடிச்சுப் போடுவா. அதனலத்தானே என்னமோ அப்பா எங்கேயோ காணமலே போய்ட்டாரு."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன! எங்க அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். சவம் ஒழிஞ்சுதுன்னுட்டு வேறே எடத்துக்கு கிளம்பிட்டா."

"அது இருக்கட்டும். இப்போ ஒங்க அம்மா ஒன்ன விட்டுட்டு எங்கே போன?"

"எங்கேயோ? அதுதானே எனக்குந் தெரியலே. இங்கேயே நில்லுன்னுட்டு எங்கேயோ போன. அப்புறம் காணவேயில்லே. ரொம்ப நேரம் நின்னு பார்த்தேன். காணலே. உடனே பயமா வந்துட்டு அழ ஆரம்பிச்சேன். அந்தாலே தான் நீ வந்திட்டியே. தாத்தா! இந்தக் கூட்டத்திலே அவளைத் தேடிப்பிடிக்க என்னல் முடியுமா? இப்போ நான் எங்க தாத்தா போக?"

"எங்கேயம்மா போகப்போறே? பயப்படாதே! ஒங்க அம்மா வந்தா அவகூடப் போ. இல்லாட்டா எங்கூடவே இரு."

"இந்த வயசு காலத்திலே என்னயும் எப்படித் தாத்தா! வச்சி காப்பத்தப் போறே?"

"அட பயித்தியக்காரி! அதற்கு நீ ஏன் கவலைப்படறே. நான ஒன்னை கவனிக்கப்போறேன். ஒன்னையும் என்னையும் கவனிக்கறவன் ஒருத்தன் இருக்கான். எல்லாம் அவன் பார்த்துக்கொள்வான்."

இந்த ஆறுதல் மொழியைக் கேட்டதும் அழுது இருளடைந்திருந்த முகம் பிரகாசித்தது. அந்த பிரகாசத்தின் ஒளி "தாத்தாவின்" கண்களில் பிரதிபலித்தது.

அனாதையாய் வழி தெரியாது திகைத்துக்கொண்டிருக்கும் ஒரு இளஞ்ஜீவனின் வாழ்க்கைக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அநுபவ முதிர்ந்த ஒருவன் அங்கு நின்றிருந்தான். அகங்காரம், மமதை, செல்வச் செருக்கு முதலிய புயல்கள் சுழலும் இடத்திலே இச்சிறு கொடியைத் தாங்கும் கொழு கொம்பாக அமைந்தான் அவன். "ஐயா! பிச்சை" என்று கேட்டால் சிறிவிழும் நாக சர்ப்பங்களின் மத்தியில் அவர்கள் பாதை அமைந்திருந்தது. செல்வத்தின் சுழற்சியில் வெகு தூரம் வீசப்பட்டவர்கள் அவர்கள். பிறருடைய இரக்கத்தினல் தான் உலகில் அவர்கள் ஜீவிக்கவேண்டியிருந்தது. இந்த நிலைமையில் 'தாத்தாவும்' அந்த அனாதைச் சிறுமியும் கூடித் தங்கள் வாழ்க்கைச் சதுரங்கத்தை விளையாட ஆரம்பித்தார்கள்.

## 2

"தாத்தா! இன்று ஒண்ணும் கிடைக்கலேயா?"

"இல்லேயம்மா! என்ன செய்வது? யாராவது தந்தால்தானே கிடைக்கும். நம்மைக் கண்டதுமே எரிஞ்சி விழுகிறார்களே! என்ன செய்வது?"

"நாசமாய்ப் போகட்டும். ஏழைகளுக்கு இரங்காதவர்களிடமா செல்வம் சேர வேண்டும்? தாத்தா! உலகத்திலே இரக்

கமே கிடையாதா? பணக்காரர்களிட்டே இரக்கமே இருக்காதா?"

"ஐயய்யோ! அப்படி யெல்லாம் பேசாதே! அவர்கள் என்னசெய்வார்கள்? ஒலகத்திலே எல்லாரும் இரக்கமுடைய வர்களாய் தயாளமாகவா இருக்கிறார்கள்? அப்படியானல் நாம் தினம் ஏன் பட்டினி யாய்க் கிடக்கவேண்டும்? இதெல்லாம் அவர்களுடைய குற்றமா? இல்லே. நமது பூர்வஜென்ம பலன்."

"எங்க அப்பாவும் அப்படித்தான் சொல்வாரு. அது கிடக்கட்டும் தாத்தா! நீ நிஜச் சாமியாரா? பொய்ச் சாமியாரா?"

"ஏனம்மா? இப்படிக் கேட்கிறே!"

"இல்லே...அப்பா சொல்வாரு. இப்படி ஒலகத்திலே சாமியார் சாமியார்னுட்டு அநேகம் பேர் கிளம்பிட்டான்கள். அதனாலே நிஜத்து சாமியார் மதிப்புக்கூட போயிட்டுது! அன்புதான் ஒலகத்திலே தெய்வம் இன்னு என்னவல்லாமோ சொல்வாரு. அதுதான் கேட்டேன்."

"சரிதான்! நீதான் சொல்லேன். நான் பொய்ச் சாமியாரா, நிஜச் சாமியாரான்னுட்டு."

"நீயா தாத்தா! எவ்வளவு சந்தோஷமா யிருக்கே. பட்டினியா கெடந்தாலும் சிரிச்சிக்கிட்டே பேசிறியே. சில சாமியாருங்கோ வயித்துலே இல்லாட்டா 'வள் வள்'ன்னுட்டு விழுவாங்கோ. அதனாலே நீ நிஜசாமியாருதான் தாத்தா!"

"சரியாய் போச்சுபோ! சந்தோஷமா யிருந்தா போதுமா? வெளிப் பார்வையா பாத்து யாரையும் ஒருவிதமா எண்ணிடாதே! அது கடைசியிலே ஆபத்தா முடியும்."

"இல்லத் தாத்தா! அன்னிக்கி ஒரு நாள் ஒருத்தன் வந்து சோறு கேக்கல்லே?"

"ஆமாம்! அதற்கென்ன?"

"அப்போ நீ ஒனக்கிருந்த சோற்றை கொடுத்துட்டு பட்டினியாப் படுத்துக் கிடக்கல்லே. அன்னிக்கேத்தான் ஒன்னே தெரிஞ்சுக்கிட்டேனே. எங்க அப்பா என்ன என்ன சொல்வாரோ அதெல்லாம் ஒங்கிட்டே சரியா யிருக்கு" என்று 'தாத்தா'வின் கன்னத்தைப் பிடித்துவிட்டு கடகடவென்று சிரித்தாள். வறுமை உள்ளத்தில் பிறந்த அந்த இளஞ் சிரிப்பின் ஒலி அந்த மண்டபத்தில்போய் எதிரொலி செய்தது.

## 3

தைப்பூசத்திற்கு முதல்நாள். மழை கொட்டுகிறது. தாம்பிரபரணியில் பிரவாகம் வரலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். எத்தனையோ அனாதை ஜீவன்களை மழையிலும் வெயிலிலும் காப்பாற்றி வந்தது தைப்பூச மண்டபம். 'தாத்தா'வும் அம்பிகையும் அந்த மண்டபத்தின் ஒரு மூலையில் ஒட்டிக்கொண்டு கிடந்தார்கள்.

அம்பிகைக்கு இரண்டு மூன்று நாளாக ஜுரம். அன்று அதிகமா யிருந்தது. அவளால் எழுந்து உட்காரக்கூட முடியாது. தாத்தா ஒரு தகரப் போணியில் வெந்நீர் சுடவைத்துக் கொண்டிருந்தார்.

மறுநாள் தைப்பூசத்தன்று அந்த மண்டபத்திற்குத்தான் சுவாமி எழுந்தருளும். ஆகலால் அன்றே எல்லோரும் அந்த மண்டபத்தை விட்டு காலியாக வேண்டும். இந்த செய்தியைக் கேட்டதும், துப்பாக்கி சப்தத்தைக் கேட்டவுடன் மரத்தில் தங்கியிருந்த பறவைகள் நாலாதிசையும் கத்திக்கொண்டே பறந்து போவதுபோல, அந்த மண்டபத்தில் அடங்கி யிருந்த ஜீவன்களெல்லாம் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் முணுமுணுத்துக்கொண்டே வெளியேறினர்கள். எழுந்திருக்க முடியாத நிலைமையிலுள்ள அம்பிகையை கைத் தாங்கலாக வெளியே கூட்டிக்கொண்டுவந்தார் 'தாத்தா.'

அடர்ந்து வளர்ந்த மதுரமரந்தான் அவர்களிருவருக்கும் தங்க இடமுமளித்தது. மரத்தினடியில் ஒரு கந்தல் துணியை விரித்து மரத்து வேரில் தலையை வைத்து அம்பிகை படுத்துக்கொண்டாள். மழை அப்பொழுதுதான் நின்றிருந்தது. ஆற்றின் வெள்ளமும் அம்பிகையின் சுரமும் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக் கொண்டே வந்தது. 'தாத்தா'வின் கண்கள் அம்பிகையின் முகத்திலே பதிந்துக்

கிடந்தன. கைகள் அவள் தேகத்தை தடவிக்கொண்டிருந்தன.

"தாத்தா! குளிர் அதிகமாயிருக்கிறதே! இப்போ அந்த மண்டபத்துக்குப்போனா என்ன?"

"இல்லே அம்மா? இப்போ அங்கே போகக்கூடாது. போனா அவுங்க சண்டைக்கு வந்திடுவாங்க."

"எதற்குத் தாத்தா சண்டைக்கு வருவாங்க? நம்மைப்போலொத்தவங்க இருக்கிறதுக்குத்தானே இந்தமாதிரி மண்டபம் கட்டிப்போட்டிருக்காங்க"

"ஆமா அம்மா! நீ சொல்வது சரிதான்! ஆனா, நாளேக்குஅந்த எடத்துக்கு சாமி வரப் போராரிலே."

"அதனாலே என்ன? நாமும் அங்கே ஒரு மூலேயிலே இருந்தா என்ன?"

"அதுதான் கூடாது. சாமி இருக்கிற எடத்திலே நம்மை போலொத்த பிச்சைக்காரங்க கிட்டத்திலே போகலாமா?"

"ஆமா! தாத்தா? கடவுள்ன்னா பிச்சக்காரன்னுட்டும் பணக்காரன்னுட்டும் பார்க்கமாட்டார்ன்னு அப்பா சொல்வாரே?"

"நெசந்தான் அம்மா! கடவுளா பார்க்கிறார். அவருக்கு ஏழை-பணக்காரர், முட்டாள்-அறிவாளி எல்லாம் ஒரேவிதந்தான். ஆனா மனுஷனுக்கு உண்டு இந்த வித்தியாசமெல்லாம். அதனாலேத்தானம்மா நீ காச்சலாயிருக்கும்போதுகூட இந்த மழை ஈரத்திலே படுத்துக் கிடக்கவேண்டி இருக்கு."

அடுத்தாற்போல் அம்பிகை பேச வாயெடுத்தாள். சப்தம் வெளிவரவில்லே. கண்களின் கருவிழி மேலே போய்க்கொண்டிருந்தது. தேகம் கொதித்துக் கொண்டிருந்தது. வெள்ளம் இவர்களே நோக்கி வந்துகொண்டிருந்தது.

எங்கும் மௌனம். விடாத மழை ஒய்ந்தது. பறவைகளின் சப்தம்—வெள்ளத்தின் இறைச்சல்—தாத்தாவின் அலேபாயும் மனம்—உயிருக்கு மன்றாடும் அம்பிகை இவைகள்தான் சலனமுள்ள வஸ்துக்கள்.

திடீரென்று அம்பிகை கண்விழித்தாள் வாய்விட்டுச் சிரித்தாள். "அப்பா! எங்கே போறே! நில்லு, நானும் வாரேன்" என்று ஒரு கூச்சல்போட்டாள். மரத்தின் உச்சியையே கவனித்துப் பார்த்தாள். தாத்தாவும் மேலே அண்ணாந்து பார்த்தார். மரத்திலிருந்து ஒரு காய் கீழேவிழுந்தது. அம்பிகையின் உயிரும் நழுவிவிட்டது. 'தாத்தா' பார்த்தார். கண்கள் மூடிக்கிடந்தன. மரணதேவனின் சுவடு அவள் முகத்தில் பதிந்துகிடந்தது. வேதாந்த உள்ளத்திலிருந்து ஒரு பெருமூச்சு வந்தது. வெள்ளத்தைப் பார்த்தார். எத்தனேயோ குமிழிகளே உண்டாக்கி அழித்துக் கொண்டே வெள்ளம் பேரிரைச்சலுடன் ஓடிக்கொண்டேயிருந்தது.


## புத்திக்கு உணவு வேண்டாமா?

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ சங்கராசார்யார் உபன்யாசங்கள் | 1 | 8 |
| 2. | அற்புத உலகம் (பெ. நா. அப்புசாமி அய்யர்) | 1 | 0 |
| 3. | விதியின் செயல் முதலிய கதைகள் (வ. எஸ். பஞ்சாபகேசய்யர் ஐ. ஸி. எஸ்.) | 0 | 6 |
| 4. | குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| 5. | சந்திரிகா (குகப்ரியை) | 0 | 12 |
| 6. | ஹிட்லரும் மகா யுத்தமும் (A. G. வெங்கடாசாரி, பி.ஏ.) | 1 | 4 |
| 7. | இளைஞன் கனவு (டி. என். குமாரஸ்வாமி மொழி பெயர்ப்பு) | 1 | 4 |
| 8. | தேசபக்தன் கந்தன் (கே. எஸ். வேங்கடரமணி) | 1 | 0 |
| 9. | முருகன் ஓர் உழவன் (கிருஷ்ண குமாரி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |

**சுவேதாரண்ய ஆச்ரமம்**

7, வடக்குமாட வீதி, மயிலாப்பூர் மதராஸ்.

# வள்ளியின் காதலன்

(கே. வேங்கட்ராமன். பி.ஏ.)

## 1

புன்னகை தவழும் அதரத்தில் அன்று துக்கம் ததும்பியது. முகத்தில் எப்பொழுதும் காணப்படும் அந்த இனிய சாந்தமும் காணப்படவில்லை. கண்களோ, நீர்ப் பிரவாகத்தில் மூழ்கிக்கொண்டது. பூக்குடலை சக்தியற்ற இடது கையில் தொங்கிக்கொண்டிருக்க, வலதுகை எப்பொழுதும் போல் சுறுசுறுப்போடல்லாமல், மெல்ல பூக்களைக் கொய்து, குடலையில் போட்டுக்கொண்டிருந்தது. நேற்று வரையில் ஒரு பூ கூட கீழே விழுந்ததில்லை! ஆனல் இன்றோ, குடலையில் போடப்படும் பூக்களில் பாதி கீழே விழுந்துகொண்டிருந்தன!

இவைகளைக் கவனித்தான் கந்தன். வள்ளியைக் கண்டதும், தின்பண்டத்தைக் கண்ட குழந்தையைப்போல் தாவி ஓடிவந்த கந்தன், வள்ளியின் சோபையற்ற நடையையும், நீர் ததும்பும் கண்களையும் கண்டதும், அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவனல் மேலே நடக்க முடியவில்லை. வள்ளி தன்னைப் பார்ப்பாள் என்று எண்ணினன். ஆனல் அவளோ, கந்தன் பக்கம் திரும்பவே இல்லை.

"வள்ளி!"

பதில் இல்லை.

"வள்ளி, என்மேல் கோபமா? நான் உனக்கு என்ன குற்றம் செய்துவிட்டேன்? உன் முகத்தை ஒரு நாள் காணுவிடில், என் உயிர் என்னிடத்தில் இருப்பதில்லையே! அப்படி இருக்கும்பொழுது, என் மேல் என்ன கோபம்?" என்று கெஞ்சினன் கந்தன்.

"இனி என்னைப்பற்றி நினைப்பதையே விட்டுவிடு. இன்றை முதற்கொண்டு, நீ வேறு, நான் வேறு" என்றுள் வள்ளி.

"என்ன பேசுகிறுய்? நீ வேருவது, நான் வேருவது? அந்த வேற்றுமை உயிர் பிரிந்துபோன பிற்பாடல்லவா?"

"உயிர் இருக்கும்பொழுதுதான்! என் நயனுவுக்கு உன்னை அடியோடு பிடிக்கவில்லையாம். கொஞ்ச நேரத்திற்கு முன்பு ஒருத்தர் என் நயனுவிடம் பேசிக்கொண்டிருந்தார். அவர், என்னை உனக்கு கல்யாணம் செய்துகொடுக்கும்படி நயனுவிடம் சொன்னுர். அப்பொழுது எனக்கு உடம்பெல்லாம் பூரித்துவிட்டது. அடுத்த நிமிஷம் என் நயனு என்ன சொன்னுர் தெரியுமா? அந்த திருட்டுப் பயலுக்கா? அப்பன் ஒரு திருடன், அயோக்கியன். அதற்குமேல் பிள்ளை. வள்ளியைக் கொண்டு போய் கிணற்றிலே தள்ளினுலும் தள்ளுவேனே ஒழிய, அந்தப் பயலுக்குக் கொடுக்கமாட்டேன், என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார். வந்தவர் எவ்வளவோ உனக்காக பரிந்து பேசினுர். நயனுவை ஒன்றும் அசைக்கவில்லை. இனிமே நான் என்ன செய்வேன்?" என்று சொல்லுவதற்குள், துக்கம் அவளுடைய தொண்டையை அடைத்துவிட்டது. கண்களினின்றும் நீர் தாரை தாரையாக வழிந்தது.

கந்தனுக்கும், வள்ளி சொன்னதைக் கேட்டதும் உலகம் முழுவதுமே சுற்றுவதுபோல் தோன்றிற்று. சிறிது நேரம் பொறுத்து, "வள்ளி, இதற்காகப் பயப்படாதே! உன்னைத் தவிர வேறு ஒருவரையும் நான் கனவில்கூட நினைக்கமாட்டேன்! இது சத்தியம்! எப்படியாவது நாம் இரண்டு பேரும் எங்கேயாவது சென்றுவிடுவோம். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்......" என்று, அவன் மேலே சொல்லுவதற்குள் யாரோ வீட்டிற்குள்ளிருந்து, "வள்ளீ! வள்ளீ!" என்று கூப்பிடும் சப்தம் கேட்டது.

"ஓடிவிடு! நயனு கூப்பிடுகிறார். இங்கே வந்தாலும் வந்துவிடுவார். நாளைக்கு காலே யில் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே, கண்களைத் துடைத்துக் கொண்டு, பூக்குடலையுடன் வீட்டிற்குள் ஓடினாள் வள்ளி.

## 2

வள்ளி வீட்டின் பின்புறத்தில் உள் ளது ஓர் அழகிய பூந்தோட்டம். அதில் எல்லாவிதப் பூச்செடிகளும் இருந்தன. அந்தப் பூந்தோட்டத்திற்கு அப்பால் மற் றொரு பூந்தோட்டம். அதற்கு அப்பால் கந்தன்வீடு. இரண்டு பூந்தோட்டங்களை யும் ஒருபெரிய முள்வேலி பிரித்திருந்தது. கந்தன் தகப்பனும், வள்ளி தகப்பனும் பரமவைரிகள். இடையில் ஒரு தருப்பை யைக்கிள்ளிப் போட்டால், உடனே அது சாம்பலாய்ப் போய் விடும். இந்த தோட் டத்திலிருந்து ஒரு பூகூட அந்தத் தோட் டத்தில் விழக்கூடாது. அப்படிவிழுந்தால், உடனே அந்தமரம் சிரச்சேதம் செய்து விடப்படும். ஆனல் உண்மைக் காதலையும், அன்பையும், எந்த விரோதம்தான் தடுக்க முடியும்? அதை இந்த பரமவைரிகள் அறிய வில்லை! கந்தனுக்கு, இவ்வித பகை இருக் கும் விஷயம் கொஞ்சம் தெரியும். ஆனல் வள்ளிக்கோ அது வரையில் ஒன்றுமே தெரியாது. தினமும் காலையில் வள்ளியின் வேலை, தோட்டத்திற்குச்சென்று பூக்களை யெல்லாம் கொய்து கொண்டு வரவேண்டி யது. கந்தனுடைய வேலையும் அதுவே. ஆனல் அதுஒருவராலும் அவனுக்குஇடப் பட்ட கட்டளை அல்ல! வள்ளி மலர் கொய்வதை தற்செயலாக ஒரு நாள் காலை யில் கண்டதும், அன்றையதினம் முதற் கொண்டே, கந்தன் மலர்கொய்வதை தினசரி வேலையில் ஒன்ருக ஏற்படுத்திக் கொண்டான்!

உண்மை அன்பு ஒருஉள்ளத்திலிருந்து, மற்றொரு உள்ளத்திற்குபாய்ந்தோடிற்று. நாட்கள் செல்லச் செல்ல, இரண்டுபேரும் துணிந்து பேசலானர்கள். இதற்குப்பிறகு முள்வேலிதான் என்ன செய்ய முடியும்? அது எவ்வளவு தடைசெய்தும் ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் அதுவே அவர்களுக்கு உதவி செய்யும்படியும் நேர்ந் தது. இரண்டு வேலிக்கும் சேர்ந்தாற் போல் ஒரு வழி செய்தார்கள். கந்தனும் வள்ளியும் அவ்வழியை, முட்களினல் ஆகிய கதவைக்கொண்டே, அடைத்தார் கள்—பிறர் கண்களில் படாதிருக்கும்படி. வள்ளியின் தாய் தோட்டத்திற்கு அதிக மாக வருவதில்லை. அப்படியே கந்தன் வீட்டிலும், ஒருவரும் தோட்டத்திற்கு வருவதில்லை. மேலும் கந்தன் தோட்டத் தில் இருக்கிறான் என்ருல், அவன் வீட்டில் ஒருவருமே தோட்டத்தில் தலைகாட்ட மாட்டார்கள்! அதனல் இவர்கள் ஒரு வரை ஒருவர் காண மிகவும் சௌகரியமா யிருந்தது. முதலில் பிஞ்சாயிருந்தது, நாளடைவில் காயாகி, பழுத்துவிட்டது, இவர்களுடைய காதல்.

## 3

"வள்ளி, வள்ளி, எழுந்திரு. பொழுது விடிந்தால் ஸரஸ்வதி பூஜை, எழுந்து முகத்தைக் கழுவிவிட்டு, தோட்டத்தில் போய், பூ பறித்துக்கொண்டு வா," என்று வள்ளியின் தாயார் சொன்னது, வள்ளிக்கு தூக்கக் கலக்கத்தில், கிணற்றுக்குள் ளிருந்து பேசுவது போலிருந்தது.

கண்களைத் திறந்து பார்த்தாள். அவ ளுடைய தாயார் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். தகப்பனர் அப் பொழுது, பல்லைத் துலக்கிக்கொண்டிருந் தார். வள்ளி எழுந்திருந்து, ஜன்னல் கதவுகளைத் திறந்து, தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள். எங்கும் நிசப்தமா யிருந்தது. கிழக்கில் அப்பொழுது தான் சிறிது வெளிச்சம் தோன்றிக் கொண்டிருந்தது. தோட்டத்தைப் பார்த் தாள். ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. மரங்களும், செடிகளும் அடர்ந்து இருந்த தால், எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. தூக்கக் கலக்கமோ என்று கண்களை துடைத்துக்கொண்டு, மறுபடியும் பார்த் தாள். சந்தேகமில்லை! அந்த மரங்களிடை யில் ஏதோ ஒரு உருவம் இருப்பதுபோல் கூடத் தோன்றியது வள்ளிக்கு!

"என்ன, இன்னமும் எழுந்திருக்க வில்லையா? பொழுது விடிந்துவிட்டதே!

போய் பூக்களைப் பறித்து வா," என்றாள் தாயார் மீண்டும்.

"இருட்டாயிருக்கிறதே! பயமாயிருக்கிறது!" என்று, இழுத்தாள் வள்ளி.

"பயப்படாதே, குடலையை எடுத்துக்கொள். கூட நான் வருகிறேன்," என்றார் வள்ளியின் தந்தை.

கைத்தடியுடன் தந்தை வர, வள்ளி பூக்குடலையுடன் தோட்டத்திற்குள் நுழைந்தாள். அப்பொழுது அவளுக்கு, நான்கு நாட்களாக பார்க்காத கந்தனின் ஞாபகம் வந்தது. தற்செயலாக ஒரு நாள் தோட்டத்தில் கந்தனைப் பார்த்துவிட்ட வள்ளியின் தந்தை அன்று முதற்கொண்டு, தோட்டத்திற்கு ஒரு காவலாளி வைத்துவிட்டார். அதனால் கந்தனால் வள்ளியை வந்து பார்க்க முடியவில்லை. கந்தனைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்த வள்ளி, பூக்களைப் பறிக்காமல் நின்றுகொண்டிருந்தாள்.

"என்ன, வள்ளி! இன்னம் தூக்கம் கலையவில்லையா? பொழுது நன்றாக விடிந்துவிட்ட பிற்பாடு கூடவா?" என்று அவள் தந்தை கேட்ட பிற்பாடு தான், வள்ளி, சுய உணர்வை அடைந்து, மலர்களைக் கொய்ய ஆரம்பித்தாள். கொஞ்ச நேரம் சென்றிருக்கும்! கால் குடலை தான் நிரம்பி இருந்தது.

அப்பொழுது திடீரென்று வள்ளியின் தந்தை "யார் அது? ஆ, நீயா? திருட்டுப்பயலே? இந்த வழக்கம் எத்தனை நாளாக? மரியாதை யாகக் கீழே இறங்கி விடு? இல்லாவிட்டால், உன்னை தலைகீழாக கட்டி தோலை உரித்துவிடுவேன்," என்று கர்ஜித்தது, வள்ளியை, அவள் தந்தை நோக்கிய திசையை பார்க்கும்படி செய்தது. அவள் உடல் நடுங்கிற்று. வாய் குளற ஆரம்பித்துவிட்டது.

"நயனா, வேண்டாம்," என்று மிக்க தடுமாற்றத்துடன் சொன்னாள் வள்ளி.

அவள் என்ன சொல்லியும் என்ன பலன்! அவளுடைய தந்தை தன்னுடைய கைத்தடியைச் சுழற்றிக் கொண்டு, கந்தனைப்பார்த்துக் கண்டபடியெல்லாம் வைது கொண்டிருந்தார்.

கந்தன் நடுங்க ஆரம்பித்து விட்டான். கால்கள் தடுமாற ஆரம்பித்தன. எப்படியாவது தன் தோட்டத்தில் குதித்து விடலாம் என்று கருதி, மெதுவாக ஒரு நுனிக்கிளைக்குச் சென்றான். மிகவும் ஜாக்கிரதையாகத்தான் சென்றான்! ஆனால் தடாலென்று கிளை முறிந்தது. அடுத்த வினாடி கந்தன் கால்களும், கைகளும் பிடியைவிட்டு நழுவின. அதே சமயம் "ஐயோ," என்று கதறிக்கொண்டு வள்ளி ஓடிவருவதற்கும், அவள் தந்தை கந்தனை அடிக்க கைத்தடியை ஓங்குவதற்கும் சரியாக இருந்தது. கந்தன்பேரில் விழவேண்டிய அடி, வள்ளியின் நெற்றியில் விழுந்தது. உடனே ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது. அதைக்கூட வள்ளி பொருட்படுத்தவில்லை! கீழே விழுந்து மரணாவஸ்தையிலிருந்த, கந்தனைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டாள்.

"எனக்கு ஒன்றுமில்லை! ஒரு கால் எலும்புதான் ஒடிந்துவிட்டதுபோலிருக்கு! நீ உடனே போய், உன் நெற்றி அடிக்கு மருந்துபோட்டு, அதைக் கவனி," என்று கந்தன் சொன்னது, வள்ளி தந்தையின் இருதயத்திற்குள் ஈட்டிபோல் பாய்ந்தது.

* * *

"ஸரஸ்வதி பூஜையும் அதுவுமா, அன்றைக்கு என்ன அப்படி, எனக்குக்கூட சொல்லாமே, மரத்தின் மேலே அந்த இருட்டிலே உட்கார்ந்திருந்தே" என்று வள்ளி கேட்க, அதற்குக் கந்தன், "உன்னை, காவல்வைத்த பிற்பாடு பார்க்கவே முடியவில்லை. அதனால் எனக்கு இருப்பே கொள்ளவில்லை. நல்லவேளையாக ஸரஸ்வதி பூஜைவந்தது. அன்றைக்கு எப்படியும் நீ அதிகாலையில் இருட்டோடு, பூப்பறிக்கவருவாய் என்று, விடியற்காலை ஐந்துமணியிலிருந்தே, மரத்திலே ஏறி உட்கார்ந்திருந்தேன், உன் நயனா கூடவருவாரென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால் அவர் வந்ததால்தான் சௌகரியமா போச்சு! இல்லாவிட்டால், நாம் இப்படி கூடி இருக்க முடியுமா? நம்முடைய பழைய குடும்பப் பகைதான் ஒழிந்திருக்குமா" என்று சொல்லிவிட்டு, வள்ளியை கம்பீரத்துடன் ஒரு பார்வை பார்த்தான்.

# கோல்ட் ஸ்மித்

"கௌசிகா"

இங்கிலாந்தில் 300-வருஷங்களுக்கு முன் மில்டன் என்று ஓர் கவியிருந்தார். புகழ்பெற்ற தேசாபிமானி. அவர் கவிகளைப்படிக்கும் பக்ஷத்தில், நமது மனதில் ஓர் பூரிப்பு ஏற்படுவதுடன், செவிகளில் ஓர் கம்பீர ராகத்தின் தொனி சதா ஒலித்துக்கொண்டிருப்பது போலிருக்கும். இவர் கீர்த்தியாக எழுதிய கவிகள் பெரும்பாலும், அவர் கண்கள் ஒளியற்று, இருந்த சமயம். தான் குருடாகப் போனதை நினைத்து "இருட்டு, இருட்டு. எங்கும் கொடியமை இருட்டு," என மிக அங்கலாப்புடன் செய்யுளில் அலறியிருக்கிறார். தற்காலத்தில் அற்ப விஷயங்களில் புத்தியை உபயோகப்படுத்தாமலே, சிலர் பணம் சம்பாதித்து விடுகின்றனர். நமது சாஸ்திரங்களில் ஸரஸ்வதிக்கும், லக்ஷ்மிக்கும் நேர் விரோதம் எனச் சொல்வதுண்டு. ஒருவேளை அதையனுசரித்துத்தான், ஒரே ரஸமும், காத்திரமும் உள்ள கவிகள் எழுதிய மில்டனுக்கு 10-பவுன் கிடைத்தது போலும்? லக்ஷம் கவிகள் எழுதியிருப்பார், லக்ஷம் பவுன் மதிக்கக் கூடியது. ஆனால் ஜனங்கள் இதை அப்பொழுது எவ்விதம் பாராட்டினர்?

ஏன்? பிறநாட்டிற்குப் போவானேன்? நமது பாரதி! தமிழ் மொழிகளின் அழகையும் கம்பீரத்தையும் எடுத்துரைத்தார். "வாழிய செந்தமிழ்" என வாழ்த்தி, தேசிய உணர்ச்சியான கவிகளை எழுதி, 35-கோடி ஜனங்கள் ஏழ்மைத்தனத்திலும் அடிமைத்தனத்திலு மிருப்பதை உள்ளமெல்லாம் உருகும்படி எடுத்து உரைத்து, இன்ப ரஸமானதும் வீர்ய மொழிகள் உள்ளதுமான கவிகளை எழுதி மிகவும் ஏழ்மைத்தனத்தில் இறந்தார். இப்பொழுது அவர் காலம் சென்றதும் அவரைப் பலவாறாகப்புகழ்கிறோம். "ஓம் சக்தி சக்தி சக்தி," என்று சக்தியின் ஞாபகமாகவே யிருந்து, நமக்கு ஓர் சக்தியைக் கொடுத்தார். ஆனால் அவரை ஜீவந்தராயிருக்கும் பொழுது நாம் எவ்விதம் பாராட்டினோம்?

நான் எதையோ எழுத ஆரம்பித்தேன். எதைப்பற்றியோ எழுதிவிட்டேன். இங்கிலாந்தில் சில வருஷங்களுக்குமுன், பரம சாதுவான ஒருவர் இருந்தார். அபூர்வமானதும், சொல்லழகு பொருந்தியதுமான, கவிதைகளும், நாடகங்களும், காவ்யங்களும், பல எழுதி ஆங்கில பாஷைக்கே ஓர் அழகைக்கொடுத்தார். அவரைப்பற்றி எழுத ஆரம்பித்தேன். அவர் நினைவு வந்ததும் அவர்பட்ட கஷ்டங்கள் என் மனதில் தோன்றின; தோன்றியதும், அவரைப்போல் பலர் சிரமப்பட்டதில் மில்டனையும் பாரதியையும்பற்றி சற்று எழுதிவிட்டேன். மன்னிக்கவும்.

அவர், அவர், என்று எழுதியிருக்கிறேனென்று கோபிக்காதீர்கள்; அவர் பெயரைச் சொல்லுவதற்கே எனக்கு மிகச் சந்தோஷம்; அவ்வளவு தங்கமான பெயர். "கோல்ட் ஸ்மித்" என்று பெயர் பெற்று விளங்கினர், "கோல்ட்" என்று மாத்திரம் பெயரிடப்பட்டிருந்தால் ஒருவேளை அவர் கோடீஸ்வரனாயிருந்திருக்கலாம். அவர் பெற்றோர்கள் மூன்று எழுத்துகளைச் சேர்த்து "கோல்ட் ஸ்மித்" என்று நாமகரணம் செய்தனர். "கோல்ட் ஸ்மித்" என்ற பதத்திற்கு தங்கவேலை செய்பவன் என்று அர்த்தம். எவ்விடமாவது பொன் வேலை செய்பவர்களை கோடீஸ்வரராகக் கண்டிருக்கிறீர்களா? சதா தங்கத்தைத் தொட்டவண்ணமே யிருப்பார்கள்; அபூர்வமானதும், அழியக் கூடாததும், விலை மதிக்கக் கூடாததுமான நகைகளையும், ஆபரணங்களையும் செய்வார்கள்; ஆனால், அவர்களிடம் மாத்திரம் ஒரு சல்லிகூடத் தங்குவதில்லை. நான் இப்பொழுது எழுதும் "கோல்ட் ஸ்மித்" தங்கத்தில்

வேலை செய்யவில்லை. தங்கமான மொழிகளையும், வார்த்தைகளையும், காவ்யங்களையும், நாவல்களையும், என்றும் அழியாத நிலையில் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். ஆனால் அவருக்குக் கிடைத்த கூலி!

அவர் மனதுதான் என்ன? தங்கமான மனது. மனது அவ்விதம் இருந்ததே தவிர முகம் வசிகரமானது இல்லை. அம்மை வடு முகம்; அகத்தின் அழகு முகத்தில் தோன்றவில்லை. அவர் முகத்தைக்கண்டு ஒருவரும் நேசிக்க முடியாது; ஆனால் பற்பல வித்வான்கள், இவருடைய குற்றமில்லா குழந்தை மனதைக்கண்டு அவரிடம் அளவற்ற அன்புடனிருந்தனர். அவர்களில் வாக்கு சாதுர்யமுடையவரும், மஹாவித்வானுமாகிய ஸாம்யுவேல் ஜான்ஸேன் என்பவர்கோல்ட் ஸ்மித்தைப்பற்றி எடுத்துரைக்கும்பொழுது "கோல்ட் ஸ்மித் பேசினால் பச்சைக்கிளி; எழுதினால் தேவவாக்கு" எனக் கூறியிருக்கிறார். இதைவிட அழகாக என்னால் எவ்விதம் உரைக்க முடியும்?

ஒருநாள் ஜான்ஸன் தன் ஸ்நேகிதர்களுடன் உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்; அத்தருணத்தில் ஒரு பையன் ஓடிவந்து ஒரு சிறிய காகிதத் துண்டை அவர் கையில் கொடுத்தான். அதில் சில எழுத்துக்கள் அவசரமாக கிறுக்கப்பட்டிருந்தன. அதில் "நான் மிகச் சங்கடமான நிலையில் இருக்கிறேன். உடனே வரக் கேட்டுக் கொள்கிறேன்" என்று எழுதி "கோல்ட் ஸ்மித்" எனக் கையொப்பமிட்டிருந்தது.

"இந்த அசடு என்னபண்ணிவிட்டதோ, நான் அதைப் பார்த்துவிட்டு வருகின்றேன்," என்று தன் நண்பர்களிடம்விடை பெற்றுக்கொண்டு, ஜான்ஸன், கோல்ட் ஸ்மித் இருக்குமிடம் சென்றார். அங்கு ஏக கூக்குரலாயிருந்தது. ஒரு ஸ்திரீ கோல்ட் ஸ்மித் இருந்த அறையின் வாசற்படியில் நின்றுகொண்டு ஓர் கம்பை வைத்துக் கொண்டு "வெளியில் வரட்டும்; சொல்லுகிறேன். நானும் 4-மாதமாகப் பார்க்கிறேன். வாடகை கொடுக்காமல் ஊரெல்லாம் தானம் பண்ணுகிறானம், தானம்" என்று மிரட்டிக் கொண்டிருந்தாள்.

கோல்ட் ஸ்மித்தும் ஒன்றும் பதிலளியாமல், சிவனே என்று அந்த ஸ்திரீயின் வசை மொழிகளைக் கேட்டுக்கொண்டு ஜான்ஸன் வரவை எதிர்பார்த்த வண்ணமிருந்தார்.

ஜான்ஸன் வந்தார். அந்த ஸ்திரீயின் கோபத்தைத் தணித்து, உள்ளே புகுந்தார். புகுந்ததும் அவர் கண்டது என்ன?

பூரா உடலும் தெரியவில்லை. முகம் மாத்திரம் வெளியே தெரிந்தது. இந்நிலையைப் பார்த்ததும் ஜான்ஸன்மனம் இளகி, "ஏன் இவ்விதம் படுத்திருக்கிறாய்"? என்று சற்று கோபத்துடனும், அடக்கமுடியாத வருத்தத்துடன் கேட்டார்.

"எனக்கு உடை ஒன்றுமில்லை; வெளிக்கிளம்ப முடியாமல் தவிக்கிறேன். நேற்று கொடும்பனி; அதைத் தாங்கமுடியாமல் இந்த மெத்தையைக் கிழித்து பஞ்சின் மத்தியில் உடலைவிட்டுப் படுத்தேன். வெளியில் கிளம்ப முடியவில்லை. அப்படிக் கிளம்பினாலும், வாசற்படியில் நிற்கும் ஸ்திரீ என்னைக் கொன்று விடுவாள்போலிருக்கிறது. என்ன செய்வதென்று தெரியாமல் உங்களை வரவழைத்தேன்" என்று பரிதாபத்துடன் சொன்னார்.

"உன் உடை எங்கே?" என்றார் ஜான்ஸன். "நேற்றிரவு வீடு திரும்பும்போது என் வீட்டு வாசற்படியில் ஓர் ஸ்திரீ, அந்தக் கொடும்பனியில் தன் குழந்தையை வைத்துத் தவித்துக் கொண்டிருந்தாள்; பரம தரித்திர தசையில் மெலிந்து வாடியிருந்தாள். என்னை ஏதாவது உதவி புரியுமாறு வேண்டினாள். என் நிலை அவளுக்கு எவ்விதம் தெரியும்? கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. அதைச் சொல்லத் துணியாதவனாய் என் அறைக்குவந்து என் உடையை விற்று ஏதாவது பணம் எடுத்துக் கொள்ளட்டும் என்று எண்ணி என் உடையை அனுப்பினேன்" என்றார் கோல்ட் ஸ்மித்.

ஜான்ஸனுக்கு ஒரே வருத்தம்; அளவில்லாக் கோபம். கையிலிருக்கும் பணத்தை எந்த ஏழைக்கும் கொடுத்து தான் நிர்க்கதியாய் எப்பொழுதும் நின்றால்

(483-ம் பக்கம் பார்க்க)




# கிணற்றில் விழுந்த சந்திரன்

(ரங்கனாதன்)

ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் மிகுந்த மூடன். தவிர ஒருவருடைய சொல்லையும் கேட்கமாட்டான். ஒரு நாள் பௌர்ணிமை வந்தது. உலக முழுவதும் நிலா பால் போல் காய்ந்து கொண்டிருந்தது. அக் குடியானவன் அந்த நிலாவில் தன்னுடைய தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச எண்ணினான். அவனுடைய தோட்டத்தில் ஒரு பெரிய துறவு இருந்தது. அதிலுள்ள கயிற்றினால் ஜலத்தை பெரிய குடத்தினால் இழுத்து இழுத்து தோட்டத்திலுள்ள மரம், செடி, கொடி, எல்லாவற்றிற்கும் பாய்ச்ச ஆரம்பித்தான். கொஞ்ச நேரம்வரை வேறொன்றையும் கவனியாமல் அதே வேலையா யிருந்தான். பிறகு கிணற்றில் குனிந்து பார்த்தான். அதில் சந்திரனுடைய உருவம் தெரிந்தது. உடனே நடுங்கிப்போய் ஆகாயத்தைப் பார்த்தான். அச் சமயம் சந்திரன் மேகத்தில் ஒளிந்துகொண்டுவிட்டது. அந்தக் குடியானவன், "ஐயய்யோ ? குடி முழுகிப் போய்விட்டதே" என்று கூக்குர லிட்டான். அவனுடைய மனைவி குடிசையிலிருந்து வெளியில் வந்து, "என்ன விஷயம்?" என்று கேட்டாள். குடியானவன். "உனக்கு ஒன்றிலும் கவலையேயில்லை. இல்லாவிட்டால் இவ்வளவு நாழி இந்த விஷயத்தை அறிந்து கொண்டிருக்கமாட்டாயா ? பார், சந்திரன் கிணற்றில் விழுந்துவிட்டான். இன்னும் சிறிது நேரத்திற்குள் அவனை எடுக்காவிட்டால் அவன் அங்கேயே செத்துவிடுவான். சீக்கிரம் ஒரு பெரிய கூடை கொண்டு வா. அதைக் கயிற்றில் கட்டி கிணற்றில் விட்டு சந்திரனை எடுக்கவேண்டும்" என்றான். அவளும் ஒரு பெரிய கூடையைக் கொண்டுவந்து கொடுத்தாள். குடியானவனும் கூடையைக் கிணற்றில் போட்டு ஜலத்தில் அமிழ்த்தி அங்குமிங்கும் அலசினான். கிணற்று ஜலம் கொந்தளிக்க ஆரம்பித்தது. சந்திரனுடைய உருவம் கொந்தளிப்பினால் மறைந்து விட்டது. அப்பொழுது கூடை ஒரு கல்லில் சிக்கிக்கொண்டு கனத்துவிட்டது. அவனால் அதை இழுக்க முடியவில்லை. சந்திரன்தான் கூடையில் வந்துவிட்டது என்று எண்ணி பலமாகக் கூடையை இழுத்தான். உடனே கயிறு அறுந்து, அவன் மல்லாந்தவாறு பூமியில் விழுந்தான். இதைக் கண்ட அவன் மனைவி "இப்படியும் ஒரு மூடமுண்டோ" வென்று எண்ணி வருத்தப்பட்டாள். அச் சமயம் மேகத்தை விட்டுச் சந்திரன் வெளியே வந்தது.

அது இவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ஓடுவதுபோல் வேகமாகப் போய்க்கொண்டே இருந்தது. சந்திரனைப் பார்த்துக் குடியானவன், "அடே, சந்திரா, ஓடாதே நில். நான் உன்னை எடுத்துவிட்டிருக்காவிட்டால் உன் கதி என்ன? நான் உனக்குச் செய்த உபகாரத்திற்கு நீ எனக்கு நன்றி செலுத்த வேண்டாமா? நான் உனக்கு உதவி செய்ததினால்தானே கீழே விழுந்தேன். நீ அதையாவது எண்ணினாயா?" என்று இரைந்து கத்தினான். அவன் பேச்சைச் சந்திரன் ஏன் கேட்கப்போகிறான்? அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாய் விட்டது. அவன் மனைவியைக் கூப்பிட்டு, "அடியே, இந்த சந்திரனின் கர்வத்தைப் பார்த்தாயா? நான் செய்த உதவியை அவன் சிறிதாவது நினைக்கின்றானா? இனிமேல் அவன் அஜாக்ரதையாய்க் கிணற்றில் விழுந்தால் நான் எடுத்துவிடமாட்டேன். அவன் ஜலத்திலேயே மூழ்கி இறந்து போகட்டும். நாம் உள்ளே போவோம் வா" என்று மனைவியை அழைத்துக்கொண்டு தன் குடிசைக்குச் சென்றான்.

---


(481-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன செய்வது? அதிலும் உடைகளையும் கொடுத்து நின்றால்? அதை எல்லாம் இப்பொழுது நினைத்து என்ன செய்வது? கோல்ட் ஸ்மித் தம் கடனைத்தீர்க்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார் என்று கேட்டார். கோல்ட் ஸ்மித் அலமாரியில் தாம் ஒரு நாவல் எழுதி வைத்திருப்பதாகத் தெரிவித்தார். ஜான்ஸன் அதை ஒரு பிரசுரகர்த்தாவிடம் கொடுத்தார். அதன் மூலமாக 60 பவுன் கிடைத்து கோல்ட் ஸ்மித் கடன் சிறிது நிவர்த்திக்கப்பட்டது. அவருக்கு கிடைத்தது 60 பவுன் தான்; ஆனால் புஸ்தக வியாபாரிகளும், அச்சுப் பதிப்பித்தவர்களும் கணக்கில்லா லாபத்தை யடைந்தனர்.

அந்த நாவல் "வேக் பீல்ட் பாதிரி" என்று பெயர்பெற்று ஆங்கில பாஷைக்கே ஓர் இனிமையும், அழகையும் கௌரவத்தையும் அளித்திருக்கிறது. பல பாஷைகளில் தற்காலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு லக்ஷக்கணக்காக விற்பனையாகிவருகிறது. 250 வருஷங்களுக்குப்பிறகு அதன் பெருமை எவ்விதம் உயர்ந்தோங்குகிறது? சொல்லழகையும், நடையழகையும் ஓர் பாஷைக்கு அளித்தவர், முக அழகையும், லக்ஷ்மீ கடாக்ஷத்தையும் பெறவில்லை. அவர் எழுதிய நூல்கள், காவ்யங்கள், நாவல்கள் எல்லாம் அமிர்தகலசம் என்றே சொல்லவேண்டும்.

அவர் மிகவும் ஏழ்மைத்தனத்தில் கஷ்டப்பட்டார். நல்லவேளை; வாழ்நாள் முழுதும் பிரம்மச்சாரியாகவே யிருந்துவிட்டார். இல்லாவிட்டால்......?

---



“சுமங்கலி”யில் ஓர் காட்சி